# ரோஜா

வைகாசி 1996 மலர்-3 இதழ் - 13

$1.50

சிறப்பாசிரியர்
கலைவாணி
ராஜகுமாரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(416) 269-1994
(416) 264-2715
(416) 418-2759

**Viveka Printers**

60 Barbados Blvd, #6
Scarborough, Ont.

எங்கள் வடிவமைப்பில்
பலவிதமான டிசைன்களில்
திருமண அழைப்பிதழ்கள்,
(எமது ஸ்தாபனத்தில் மட்டுமே கிடைக்கும்)

நீங்கள் விரும்பிய டிசைன்களில்
கேக் பெட்டிகள்

மற்றும்


உங்கள் சகல விதமான அச்சு
வேலைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

**விவேகா அச்சகம்**

எமது மக்களுக்கு பல வர்ண வேலைகளை
குறைந்த விலையில், உயர்ந்த தரத்தில்
செய்துகொடுக்கும் நோக்கத்துடன்
ஆரம்பிக்கப்பெற்ற ஸ்தாபனம்
( அச்சகங்களுக்கு விஷேட கழிவில் செய்து கொடுக்கிறோம்.)

தலைமையகம்: சங்கர் அச்சகம்
3150 Eglinton Ave.E.
Scarborough, Ont

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உள்ளே....


- ஈழத்தமிழர்களை அழித்து (அரசியல்) - 03
- நவீன ஓவியம் - 06
- கள்ளிச் செடியோடு (கவிதை) - 07
- மனம்விட்டு - 08
- இலக்கிய உறவுகள் (கட்டுரை) - 09
- தகவல்காரர் (குறுநாவல்) - 15
- வர்த்தகம் - 17
- ராசுக்குட்டி அப்பா - 19
- தொழில் நுட்பம் - 23
- சிறுவர் பூங்கா - 26
- ஆசிரியர் பேனா - 28
- வாசகர் பேனா - 29
- இதுவும் நடக்கலாம் (நகைச்சுவை) - 30
- சிறப்பாசிரியர் பக்கம் - 31
- கவித்துளிகள் - 32
- மரணத்துள் வாழும் மனிதர்கள் (சிறுகதை) - 33
- என் கிராமம் (கவிதை) - 38
- பார்வை - 39
- பச்சைக் குழந்தையும்.... (கவிதை) - 40
- சந்திப்பு - 43
- எழுத்தாளர் அரும்பு - 52
- சினிமா - 54
- விளையாட்டு - 56
- TWISTER - 57
- சொற் சிலம்பம் - 62




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓம்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்
கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்** (ஐயாமணி)
(புங்குடுதீவு - 10)

**(416)**
**2 6 6 3 3 3 3**



**(416)**
**2 6 6 3 3 3 3**

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும், திருமணம் போன்ற மங்களகரமான வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகட்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். இத்துடன் குறைந்த வாடகையில் ஸ்காபுரோ, ரொறன்ரோ இடங்களில் மண்டப வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

கல்யாண மண்டபம், மணவறை, பந்தல் அலங்காரம், பூமாலை, ஆண்டாள் மாலை, சடைநாகம், தலைப்பாகை, தலைநகை, பூஜைக்குரிய பொருட்கள் இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

628 E Birchmount Road, Scarborough, ON. M1K 1P9





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களை அழித்து ஒழிக்கும் ஸ்ரீலங்கா அரசின் அராஜகம்!

தமிழீழத்தில் ஸ்ரீலங்கா அரசின் கொடுமையால் தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் வார்த்தைகளால் வடிக்கமுடியாதவை!

உண்ண உணவின்றி - உடுக்க உடையின்றி - கல்வி கற்பதற்கு பாடசாலையின்றி - இருப்பதற்கு இடமின்றி அகதிகளாக அங்கும் இங்கும் திரிந்து கொண்டிருக்கும் எம் சகோதரர்கள் மனோ வியாதியினாலே நாளாந்தம் பாதிக்கப்பட்டுக்கொண்டு வருகிறார்கள்!

தங்கள் விடிவுகாலம் கிட்டாதா?
என ஏங்குகின்றார்கள்!

சிங்களப் படை எடுப்பினால் தங்கள் வீடு வாசல்களைவிட்டு - சொத்து சுகங்களை இழந்து - சொந்த பந்தங்களை விட்டு புதிய இடங்களில் குடியேறி அல்லல்படும் எம்மக்களின் வேதனைகளை எடுத்துக் கூறமுடியுமா?

மனிதாபிமானம், மனித நேயம், இரக்கம், அன்பு, விட்டுக்கொடுக்கும் தாராளமான மனப்பான்மை, ஜனநாயக நடைமுறைகள் அனைத்தும் ஸ்ரீலங்காவில் செத்து மடிந்து மறைந்து விட்டன!

ஆணவம், அகங்காரம், மோசடி, ஏமாற்று, பொய்ப்பிரச்சாரம், அநியாயம், அக்கிரமம், அட்டூழியம், அராஜகம், அரச பயங்கரவாதம் ஆகிய கொடூரங்கள்தான் இலங்கையின் இன்றைய நியதியாகிவிட்டனவா?

தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, ஈழத்தமிழர் படும்பாடு வேதனைக்குரியது!

நாம் என்ன குற்றம் செய்தோம்?
நாம் தமிழர்களாகப் பிறந்தது குற்றமா?
எமது உரிமையைக் கேட்பது குற்றமா?

தமிழன் தன்மானத்தோடு வாழவேண்டும் என்பதற்காக நாம் போராடுவது குற்றமா? பண்பாடு, பிரதேசம், எமது மொழி, கலை, கலாசாரம் பேணிப்பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காக குரல் கொடுப்பது குற்றமா?

நாம் நடத்துவது சுதந்திரப் போராட்டமாக ஸ்ரீலங்கா அரசுக்குப் புரியவில்லை?!

புரிந்தும் புரியாதவர்கள் மாதிரியே அவர்கள் நடத்தைகள்!

ஈழத்தமிழர்களின் போராட்டம் உச்ச நிலையில் இருந்தபோது, தாம் பெற்றுக் கொண்ட அதி நவீன ஆயுதங்களின் உதவியுடன் ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் புகழுக்கும் பெருமைக்கும் உரிய யாழ்ப்பாண நகர் மீது படையெடுத்து ஆக்கிரமித்துள்ளனர்!

ஏதோ பெரும் வெற்றியை ஈட்டிவிட்டது போல் எக்காளம் இடுகின்றனர்!

அவர்கள் அடைந்த வெற்றி தற்காலிகமானதே என அவர்கள் உணரவில்லை!

## தமிழருவி சந்திரமோகன்

தமிழர்கள் பயங்கரவாதிகள் என உலகுக்குக் காட்டுவதற்கு அவர்கள் முயல்கின்றனர்.

உண்மையில் பயங்கரவாதிகள் யார்? நீண்டகாலமாக இலங்கையை ஆட்சி செய்வது கொலைகாரக் கும்பல்களே!

மாறி மாறி பெரும் தலைவர்களையும், கல்விமான்களையும், செல்வந்தர்களையும், அப்பாவி மக்களையும் கொலை செய்து கறைபடிந்த கரங்களல்லவா இந்த கொடுங்கோன்மை ஆட்சியாளர்களின் கரங்கள்?

ஜே.ஆர். ஆட்சியில் இருக்கும்போது செய்த கொலைகள் எத்தனை? பிரேமதாசாவின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் அதிகாரம் வந்தபோது கொலை-செய்து ஆயிரக் கணக்கான மக்களை புதைகுழியில் போட்டு மூடவில்லையா?

இன்று சந்திரிக்காவின் முறை! கொலைகள் தொடர்கின்றன! உலகம் வாய்மூடி மௌனி யாக நிற்கின்றது!

அண்மையில் ஒரு தமிழ்த் தாய்க்கு நிகழ்ந்த சம்பவத்தை அறிந்து கொள்ளுங்கள்!

இந்தச் சம்பவம் உங்களுக்கு கொதிப்பையே ஏற்படுத்தும். இரத்தமே உறைந்துவிடும்.

இச்சம்பவம் தாண்டிக்குளத்தில் இடம் பெற்றுள்ளது.

தாண்டிக்குளம் ஊடாக குழந்தையின் பால் புட்டிக்குள் 'ரின்னரை' (Tinner) எடுத்துவந்த ஒரு பெண்மணி படையினரின் வற்புறுத்தலால் அதனைக் குழந்தைக்கு பருக்கியபோது அக்குழந்தை துடிதுடித்து பரிதாபகரமாக மரணத்தைத் தழுவிக் கொண்ட சம்பவம் அண்மையில் நடை பெற்றது.

ஓமந்தையைச் சேர்ந்த இப்பெண்மணி தனது கைக்குழந்தையுடன் தென்பகுதி யிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக வந்து கொண்டிருந்தபோது குழந்தையின் பால் புட்டிக்குள் 'ரின்னரை' விட்டு எடுத்து வந்தார்!

தாண்டிக்குளம் தடைமுகாமில் படையினர் சோதனையிட்டபோது பால் புட்டியை எடுத்து பார்த்த பின்பு அப்பெண்மணி யிடம் அது குறித்து வினவினர்.

இதன்போது அத்தாயார் குழந்தைக்கு சோடா எனக் கூறினார். சந்தேகம் கொண்ட படையினர் அதனைக் குழந்தைக்கு ஊட்டு மாறு வற்புறுத்தினர்.

படையினரின் பயங்கரமான வற்புறுத்தலைத் தவிர்க்கமுடியாத நிலையில் அத்தாய் தன் குழந்தைக்கு அந்த 'ரின்னரை' பருக்கினார்!

அந்தோ பரிதாபம்!

பருக்கிய சில நிமிடங்களுக்குள்ளேயே தாயின் அரவணைப்பிலேயே அந்தக் குழந்தை துடிதுடித்து பரிதாபமாக மரணத்தைத் தழுவிக்கொண்டது.

இதனையடுத்து இராணுவத்தினர் அத் தாயை கைது செய்ததுடன் குழந்தையின் சடலத்தையும் கொண்டு சென்றதாக அறியமுடிகின்றது?

பாருங்கள் அந்தத் தாய்க்கு நடந்ததை!

அந்தப் பாதகர்கள் செய்த கொடுமையின் உச்சத்தை!

இவற்றிற்கெல்லாம் இனவெறி பிடித்த ஸ்ரீலங்கா கொடுங்கோன்மை வாதிகள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

இன்னுமொரு சம்பவம் மே மாதம் 12ம் திகதி இடம்பெற்றுள்ளது.

கொழும்பு சென்ற வடபகுதி இளைஞர் ஒருவர் தாண்டிக்குளம் தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டு மண்வெட்டிப் பிடியால் மிக மோசமாகத் தாக்கப்பட்ட தாகத் தெரியவந்துள்ளது.

வெளிநாடு செல்வதற்காக மிகவும் குதூ கலத்துடன் குறிப்பிட்ட தொகைப்பணத்தை எடுத்துக்கொண்டு சென்ற வட பகுதி இளைஞர் ஒருவரே தாண்டிக்குளம் முகாமில் இவ்வாறு படையினரால் கைதுசெய்யப் பட்டுத் தாக்கப்பட்டவராவர்.

பணத்துடன் சென்ற இளைஞரை கைது செய்த படையினர் தமது முகாமிற்கு அழைத்துச் சென்று வாங்கு ஒன்றில் இவரைப் படுக்கவைத்து, வாங்குடன் சேர்த்து அசைய முடியாதவாறு கயிற்றி னால் கட்டிவிட்டு மண்வெட்டிப் பிடியால் கடுமையாகத் தாக்கினராம்.

குதிக்கால், முழங்கால் பகுதிகளிலேயே இவர்கள் மிக மோசமாகத் தாக்கியுள்ளனர்.

இரு தினங்களின் பின் கொழும்பு செல்ல விடாது வடபகுதிக்கே திருப்பி அனுப்பி விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தையும் பறிகொடுத்து பலத்த அடி காயங்களுக்குள்ளான இவ்விளைஞர் தற்போது கிளிநொச்சி வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த இளைஞன் செய்த குற்றம் என்ன?

தமிழனாகப் பிறந்ததுதான் அவன்செய்த குற்றம்.

வெளிநாடு செல்வதற்காக மிகவும் மகிழ்ச்சி யோடு கொழும்பு நோக்கிச் சென்ற இந்த இளைஞன் முடக்கப்பட்டுவிட்டான்.

ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல?

தினம் தினம் எவ்வளவு தமிழர்கள் ஆட்சி யாளர்களின் அறிவற்ற படைகளினால் துன்பத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக் கிறார்கள்?

யார் பயங்கரவாதிகள்? சந்திரிகா பயங் கரவாதிகள் என்று தமிழருக்கு நாமம் சூட்டுகின்றார்? உண்மையில் யார் பயங் கரவாதிகள்?

சந்திரிக்கா அரசு தமிழர்களுக்கு நினைக்க முடியாத கொடுமைகளைச் செய்து வருகின்றது. பின்பு தமிழர்களுடன் சேர்ந்து வாழமுயல்வது நடைமுறைக்கு ஒப்பாதது.

சிங்களவர்களின் அராஜகத்திலிருந்து தமிழ் மக்களையும், தமிழ் மண்ணையும், தம்மையும் பாதுகாத்துக் கொள்வதற்கு தமிழீழ மண்ணில் மீண்டும் தமிழீழ அரசை ஏற்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை!

தமிழினப் படுகொலையிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் காலம் கூடிய விரைவில் உருவாகும்.

இப்பேர்ப்பட்ட கொடுமை நிறைந்த ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களுடன் தமிழர்கள் இனி மேலும் சேர்ந்து வாழமுடியுமா?

நாம் ஒருங்கிணைந்து தமிழீழ மண்ணில் மீண்டும் தமிழீழ அரசை ஏற்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை!

பயங்கரவாதிகளிடமிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற நாம் குரல் கொடுப்போம்! எம் பங்கைச் செலுத்துவோம்!


மலரட்டும் 'தமிழீழம்'!

★★★★★★






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிச் செடியோடு காதல் புரிபவர்கள்!

இவர்கள்
முல்லைக்கொடியை முற்றாக ஒதுக்கிவிட்டு
கள்ளிச் செடியோடு
காதல் புரிபவர்கள்....!
சுகம் இதுதான் என்று சொல்லும்
சுற்றாடல்தனை நம்பி
முகத்தைத் தொலைத்துவிட்டு
முண்டமாய் அலைபவர்கள்..!

கலையையும்,
கலாசார நெறிகளையும்
விலைக்குப்பேசி
விற்றுவிடத் துடிப்பவர்கள்!....
குத்துவிளக்கின் ஒளியை அணைத்துவிட்டு
ஆயிரம் 'வோல்ட்' மின்குமிழை
அழகென்று நினைப்பவர்கள்...!

பாதிவழிவரை பத்திரமாய் வந்துவிட்டு
மீதி வழித்தடத்தைத்
தொலைத்துவிட்டு அலைபவர்கள்....!
பாலை வெறுத்து விஷமென்று ஒதுக்கிவிட்டு
பாம்பின் அழகில்
மதிமயங்கிப் போனவர்கள்!....

காதலென்றால் காமமென்று
கணக்குப் போட்டபடி
கண்மண் தெரியாமல் காதல் புரிபவர்கள்!....
அடக்குமுறை, அநியாயம்
அடிமைத்தனமென்று
அழகான வாழ்க்கைக்கு, அர்த்தத்தை மாற்றிவிட்டு
பகலவனை அணைக்கவென்று
பறக்கத் தொடங்கிவிட்டு
பாதியிலே சிறகெரிந்து
பரிதாபமானவர்கள்!....

நரகப் போர்வைக்கு
நாகரீகப்
பெயர்கொடுத்து
உருவத்தை மாற்றி நிதம்
உழல்கின்ற புதியவர்கள்..!
இந்த வாழ்க்கைமுறை கசக்கின்றபோதினிலே
காலம் கடந்துவிடும்
கண்ணீரும் வற்றிவிடும்..!

நிலா குகதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விட்டுக் கொடுப்பு,
அனுசரிப்பு,
புரிந்துணர்வு..........
இந்த சொற்கள்
பலருக்கு
தெரிந்திருந்தாலும்
அவற்றை
நடைமுறை
வாழ்க்கையில்
பயன்படுத்து
பவர்கள் சிலரே.
இதற்கு முக்கிய
காரணம்..... மற்றவர்களின்
உணர்வுகளை சரியாக
புரிந்துகொள்ளாமையே.......... இதற்கு
என்ன வழி என்கிறீர்களா!

யாருடன் நீங்கள் மனஸ்தாபப் படுகிறீர்களோ..... அவர்களாக நீங்கள் மாறி...... அவர்களது இடத்தில்.... நீங்கள் இருப்பதாக கற்பனை பண்ணி...... உணர்வுகளை சிந்தித்துப் பாருங்கள். உங்கள் தவறு புரியும்.

## எஸ். ராஜ்மோகன்

இப்போது ஏற்கனவே நீங்கள் மனஸ்தாபப்பட்ட மற்றும் பகைமை ஏற்படுத்திக் கொண்ட சம்பவங்களில் உங்களை மற்றவர்களாக நினைத்து...... உணர்வுகளை சிந்தித்துப் பாருங்கள்....... அதாவது எதிரியாக நீங்கள் மாறி சிந்திக்க வேண்டும்....... இப்போது உங்களுக்கு நீங்கள் விட்ட தவறுகள் புரியும். வெட்கித் தலை குனிய வைக்கும். ஏனெனில் எல்லோரும் மனிதர்கள். யாவருக்கும் சம உணர்வுகள்....... உங்களுக்கு கோபம் வருவது போல்தான் மற்றவர்களுக்கும் அதே சந்தர்ப்பத்தில் கோபம் வரும். இது நியதி.

சில சந்தர்ப்பங்களில் (உதாரணமாக வாக்குவாதம் மற்றும் சண்டைகள்) நீங்கள்....... சோலிகள் இன்றி மௌனியாக இருக்கும் போது...... மற்றவர்கள் உங்களை.... பயந்தவன்..... ஒன்றும் தெரியாதவன்.... என்றும் பட்டம் சூட்டிவிடலாம். ஆனால்....... அந்த இடத்தில் உங்கள் மௌனமும்...... அனுசரிப்பும்தான் அதிகப்படியான அறிவுடைமை.... அந்த மௌனத்தின் அர்த்தங்களை அறிவுள்ளவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். அதேவேளை அதன் பயனை... நீங்கள் பின்னர்தான் அனுபவிப்பீர்கள்.

இந்த விட்டுக் கொடுப்பு... அனுசரிப்பு... புரிந்துணர்வுகளின் முக்கியத்துவம் கணவன்-மனைவி, காதலன்-காதலி, நண்பர்கள்...., உறவினர்கள்... என்று நீண்டு கொண்டே போகும். ஓர் அன்பின் நீடிப்பு.... மற்றும் அதிகரிப்பு.... சுதந்திரம்.... யாவும் இவற்றிலேயே தங்கியுள்ளது. இந்த உலகில் ஒருவர் மற்றொருவருக்காக.... பயந்து.... உணர்வுகளை.... அடக்கி..... ஒடுங்கி வாழமுடியாது. ஒவ்வொருவருக்கும் பல பல சுயமான... வித்யாசமான... சிந்தனைகள் உள்ளன. எல்லாவற்றுக்கும் மதிப்பளித்து.... புரிந்துணர்வுடன் விட்டுக்கொடுத்து வாழ்வதே வாழ்வு......!

சரி நடந்தவைகளை மறந்து விடுங்கள்..... இன்றிலிருந்தாவது.... ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து....... உணர்வுகளுக்கு மதிப்பளித்து வாழப்பழகுங்கள். மனஸ்தாபங்கள் வரும்போது..... திடிரென மற்றவரின் நிலையில்.... உங்களை கற்பனை செய்து அவர்கள் உணர்வுகளை.... சிந்தியுங்கள். உடனே உங்கள் மனஸ்தாபங்கள்.... கருகிக் காணாமல் போய்விடும். நீங்கள் ஒரு முழு மனிதனாவதை உணர்வீர்கள். இது வாழ்க்கைக்கு அத்தியாவசியம் மட்டுமல்ல...... அத்திவாரமும் கூட...... !

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் வி. கந்தவனம் அவர்களின்

# இலக்கிய உறவுகள்

## எம். ஏ. ரஹ்மான்

1964ம் ஆண்டின் நடுப்பகுதியில் 'இலக்கிய உலகம்' என்ற எனது கவிதைத் தொகுதியை வெளியிடும் பணியில் ஈடுபட்டேன். மாத்தளை 'முக்கவிஞர் வெளியீடு' ஆக இதனை அச்சிடுவதற்கு நண்பர் ஈழவாணன் முயற்சி எடுத்தார். கண்டியிலுள்ள அச்சுக் கூடங்கள் கேட்டதொகைக்கு முக்கவிஞர் வெளியீட்டின் நிதி நிலைமைக்கும் சாதகப் பொருத்தம் சரியில்லாமல் இருந்தது.

அக்கால கட்டத்தில், 'அரசு வெளியீடு' நூல் வெளியீட்டுத் துறையில் புதுமையையும் பொலிவையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. முக்கியமாக, இலக்கிய நூல்களை எடுப்பான அட்டைப் படங்களுடன் பிரசுரித்து வந்தது. தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் நூல்களைப் போன்று அவை கண்ணைக் கவர்ந்தன. அவ்வித கவர்ச்சியுடன் தமது படைப்புக்களையும் வெளியிட வேண்டும் என்று எழுத்தாளர்கள் அங்கலாய்க்கும் அளவுக்கு அரசு வெளியீடு கொடிகட்டிப் பறக்கத்தொடங்கிய காலம் அது.

ஆரம்பத்தில் பத்திரிகையில் 'அரசு வெளியீடு' என்ற பெயரைப் பார்த்ததும் ஏதோ அரசாங்கம் சம்பந்தப்பட்ட தாபனமாக இருத்தல் வேண்டும் என்றுகூடப் பலர் கருதியதுண்டு. கருதியவர்களுள் நானும் ஒருவன். பின்பு, வெளிவந்த நூல்களைப் பார்க்க நேர்ந்த பொழுதே அரச மரத்துக்கும் அதற்கும் உள்ள தொடர்பு வெளிப்பட்டது.

அரசு வெளியீட்டின் அலுவலகம், இலக்கம் 231, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு - 13இல் அமைந்திருந்தது. முன்னறிவித்தல் எதுவுமின்றி நேராகவே சென்றேன். ஆசனத்தில் அழகான ஓர் இளைஞர். என்னிலும் நான்கு ஐந்து ஆண்டுகள் அதிக வயதிருக்கலாம். பொலிவான முகம் புன்முறுவல் பூத்தது.

'எம். ஏ. ரஹ்மான் அவர்களைப் பார்க்க வந்திருக்கின்றேன்.'

'பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள்.'

'கண்டது மகிழ்ச்சி. நான் கந்தவனம். மாத்தளையிலிருந்து வந்திருக்கின்றேன்.'

'உங்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கின்றேன். 'சிட்டுக் குருவி' நூலைப் பாத்திருக்கின்றேன். நீங்கள் பங்குபற்றிய கூட்டங்கள் பற்றிய செய்திகளையும் வீரகேசரியில் இடைக்கிடை படித்திருக்கின்றேன்.'

'என்னிடம் கவிதைத் தொகுதி ஒன்று இருக்கிறது. 'இலக்கிய உலகம்' என்று பெயர்.

பேராதனைப் பல்கலைக் கழகச் சிரேட்ட விரிவுரையாளர் திரு. வி. செல்வநாயகம் அவர்கள் அணிந்துரை வழங்கி இருக்கிறார். உங்கள் வெளியீடாக இது வரவேண்டும் என்பது என் விருப்பம்.'

கையெளுத்துப் பிரதியை நீட்டினேன். வாங்கித் தனக்கு முன்னால் வைத்துக் கொண்டார். அதனைத் தட்டிப் பார்த்து ஏதாவது சொல்லுவார் என்று எதிர் பார்த்தேன். எட்டி அப்பால் உள்ள தட்டிலிருந்து இரு புத்தகங்களை எடுத்து எனது பார்வைக்கு வைத்தார். ஒன்று புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் 'பகவத்கீதை வெண்பா'. மற்றையது 'அண்ணல் கவிதைகள்'. இரண்டுமே அரசு வெளியீடுகள். அண்ணல் கவிதைகளை நான் முன்பே வாங்கியிருந்தேன். 'பகவத்கீதை வெண்பா'வை நான் பார்வையிடுகையில் ரஹ்மான் அவர்கள் எனது கையெழுத்துப் பிரதியை எடை போடத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகத்துப் பின்னால் இயங்கிக் கொண்டிருக்கிறது 'ரெயின்போ அச்சகம்'. அச்சகர் ஒருவர் அடித்த விளம்பரப் பிரதி ஒன்றை ரஹ்மானின் பார்வைக்கு வைத்து விட்டு மீண்டும் உள்ளே சென்றார். அதனை என்னிடம் நீட்டி எழுத்துப் பிழைகளைத் திருத்தச் சொன்னார். எனக்கு உற்சாகம் பிறந்தது. மூலப் பிரதியுடன் ஒப்புநோக்கிச் சில பிழைகளைத் திருத்திக் கொடுத்தேன். அதனைப் பார்வையிட்ட பின் மணியை அடித்தார். அச்சகர் வந்து சரிபார்த்த பிரதியைப் பெற்றுச் சென்றார். சென்ற வரை ரஹ்மான் மீண்டும் அழைத்து இரண்டு தேநீர் வாங்கி வரும்படி பணித்தார்.

அதன்மேல் தொடர்ந்தும் 'இலக்கிய உலகம்' பிரதியிற் கவனம் செலுத்தினார். எனது நூலைப்பற்றி என்ன சொல்லப் போகின்றாரோ என்ற ஏக்கத்துடன் நான் மீண்டும் பகவத்கீதை வெண்பாவைப் புரட்டினேன். 'கண்ணபிரானே நீதான் கருணை காட்ட வேண்டும்' என்று உள்ளுக்குள் வேண்டிக் கொண்டேன்.

## தெரியாவிட்டால்..... தெரிந்து கொள்ளுங்கள்!

* விலங்கினத்தில் யானை பிரசவ வேதனையில் இருக்கையில், மற்ற பெண்யானைகள் அந்த பிரசவிக்கப்போகும் யானையை மறைவாக அழைத்துச் செல்லும். 22 மாத கர்ப்ப காலம் முடிந்து, பிரசவத்தின் சில நிமிடங்கள் முன்பு மற்றைய பெண் யானைகள் அந்த யானைக்கு உதவி செய்யும். ஏனைய பெண் யானைகள் துதிக்கையால் மெள்ளக் குட்டியைப் பிடித்து தடவி இழுத்து உதவுகின்றன. பெரிய பெண்யானைகள் தாயாகப் போகும் யானையை வருடும். சுமார் 250 இறாத்தல் எடையுள்ள குட்டி, தலைகுப்புற கீழே விழும்போது தானாகவே தொப்புள் கொடி அறுந்து கொண்டு விழுவது ஆச்சரியம். சுமார் 1 மணிநேரத்தில் தாய் யானை, மற்ற யானைகள் புடைசூழ, யானைக்குட்டி நடக்க ஆரம்பித்து விடுவது மேலும் ஆச்சரியம்.

தொகுப்பு: செல்வி

ரஹ்மான் என்னை நோக்கினார். நான் அவரை நோக்கினேன். அவரது ஒளிமயமான கண்கள் என்னை வசீகரித்தன. உதடுகள் முறுவலில் முகிழ்ந்தன. எனக்கு நம்பிக்கை பிறந்தது. அந்த நேரத்தில் தேநீரும் வந்து சேர்ந்தது. ஒன்றை என்னிடம் நீட்டினார் ரஹ்மான்.

தேநீரை அருந்தியவாறு பேசத் தொடங்கினார். கவிதை நூல்களுக்கு வாசகர்கள் குறைவு என்றும் அதிக விற்பனையை எதிர்பாக்கலாதாது என்றும் ஓர் எச்சரிக்கைத் தொனியில் தொடங்கினார். அது எல்லோருக்கும் தெரிந்த சங்கதி. எனினும் அவர் அனுபவப் பட்டவர். உற்றுக் கோட்டுக் கொண்டிருந்தேன். அவர் பேசப் பேச 'இவர் என்னுடைய நூலை வெளியிடப் போவதில்லை' என்ற எண்ணம் வலுப் பெறத் தொடங்கியது. எனினும் அவரது நிதானமும் தெளிவும் நிறைந்த பேச்சு என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. அவர் பேசிய பேச்சுக்கு 'கவிதை நூல்களும் சந்தைப் படுத்தலும்' என்ற தலைப்புப் பொருத்தமானதாக இருந்தது.

அவர் கேட்ட கேள்வி ஒன்று இன்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது: 'கவிதை நூலுக்கு வாசகர்கள் குறைவு எனினும் காதல் அல்லது சமயம் பற்றிய கவிதைகளை ஒரளவுக் காயினும் கட்டி அடிக்கலாம். உங்களுடையது முழுக்க முழுக்க இலக்கியம் பற்றியதாகவே இருக்கிறது. உயர் மட்ட வாசகர்களுக்கு என்றே எழுதியிருக்கின்றீர்கள். இலக்கிய அறிஞர்களையும் எழுத்தாளர்களையுந் தவிர மற்றவர்களுக்கு இதில் என்ன நாட்டம் இருக்கப் போகின்றது?'

போச்சடா என் முயற்சி என்று நான் மூச்சைவிட்ட நிலையில் மெல்லியதாய் ஒரு நம்பிக்கை ஊசி ஏற்றினார். 'அதற்காக தரமான இலக்கியங்களை நாம் குப்பையிலே போட்டுவிட முடியாது. உயர்ந்த இலக்கிய நூல்களை வெளியிடுவதே அரசு வெளியீட்டின் பிரதான நோக்கம். 'இலக்கிய உலகம்' கவிதைத் தொகுதியை வெளியிடுவோம். காகிதச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ரோஜா' மாத சஞ்சிகையின்
3வது ஆண்டின் நிறைவையொட்டி....

# ரோஜாவின்
# பூ மாலைப்பொழுது

இயல் இசை நாடக விழா



**ஆகஸ்ட் 10ஆம் திகதி சனிக்கிழமை**
**மாலை 6.00 மணிக்கு**

**416-425-2884**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pillayar Traders

உங்கள் அனைத்து தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

**பிள்ளையார் ட்ரேடர்ஸ்**

3060 Lawrence Ave.E., Scarborough, ON.
(at Lawrence & Markham)

**Tel: (416) 438-7746**



22k

SRI SIVA
JEWELLERY

721 Bloor St. W., Toronto, ON.

Tel: (416) 531-4867





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுக்கு மட்டும் நீங்கள் 200 ரூபாய் தந்தால் போதுமானது.'

எழுந்து ரஹ்மானைக் கட்டித் தழுவ வேண்டும் போல இருந்தது. மேசை குறுக்கே கிடந்தது. கண்டியில் உள்ள அச்சகத்தார் பெரிய தொகையெல்லாம் கேட்டபடியால் 200 ரூபாய் எனக்கு மிக மலிவாக இருந்தது. அப்பொழுது வேறு அச்சு வேலை எதுவோ நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் டிசம்பருக்குள் நூல் வேலையை முடித்துத் தருவதாகவும் உறுதி அளித்தார்.

நன்றி கூறி புறப்படும் வேளை பழக்க மான ஓர் உருவம் உள்ளே நுழைந்தது. எப்பொழுதோ கண்ட செம்முரசுச் சிரிப் பைப் பல காலத்துக்குப் பிறகு கண்டு மகிழும் வாய்ப்புக் கிடைத்ததும் புறப் பட்ட கால்கள் சிறைப்பட்டு நின்றன.

ஈழத்துச் சிறுகதை மன்னர் எஸ். பொ.!

எங்கள் இருவரையும் பேசவிட்டு ரஹ்மான் அச்சக அலுவல்களைக் கவனிப்பதற்காக உள்ளே போய்விட்டார். விடயத்தைச் சுருக்கமாக கூறிமுடித்தேன். எஸ் பொ. அன்றிரவு தன்னுடன் தங்கிவிட்டு அடுத்த நாள் செல்லும்படி கூறினார். அன்று ஒரு சனிக்கிழமை. 'நான் H.S.C. வகுப்புக்கு இரு பாடங்கள் படிப்பிக்கின்றவன். தமிழும் புவியியலும். பாடங்கள் ஆயத்தம் செய்தல் வேண்டும். படிப்பித்தல் குறித்து எழுதல் வேண்டும்' என்று எவ்வளவோ சொல்லியும் எஸ். பொ. கேட்கவில்லை. 'அடுத்த நாள் அதிகாலையே புறப்படலாம். பல விடயங்கள் பேச வேண்டி இருக்கு. சொன்னால் கேள்' என்று கட்டளை போட்டுவிட்டார்.

ரஹ்மானுக்கும் எஸ். பொ. வுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு பற்றி அன்றுதான் எனக்குத் தெரிய வந்தது. ரஹ்மான் தொழில் அலுவலாக வெளியே சென்றி ருந்த நேரம் அவரைப் பற்றி மிக உயர் வாகப் பேசினார் எஸ். பொ.. நல்லதொரு எழுத்தாளன் என்றும் வல்லமை மிகுந்த தொழில் நிர்வாகி என்றும் பாராட்டினார். அரசு வெளியீட்டு எழுத்தாளர்களில் நானும் ஒருவனாகச் சேர்ந்து கொண்டது பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார். அரசு வெளியீடு இலக்கிய உலகில் ஏற்படுத்தி வரும் இணையற்ற சாதனைகள் குறித்து விளக்கினார். ரஹ்மானின் 'இளம்பிறை' பத்திரிகையை மாத்தளையில் அறிமுகப் படுத்தும்படியும் கேட்டுக் கொண்டார்.

அச்சுக் கூடத்துக்குப் பின்னால் படுக்கை அறை. அன்று இரவு எனக்குத் தூக்கம் வரவில்லை. இடம் புதிது என்பதால் அல்ல. மூட்டைப் பூச்சிகளுக்கு எனது இரத்தம் புது விருந்தாக இருந்ததால். பக்கத்தில் எஸ். பொ.; அப்பபால் ரஹ்மான். அவர்கள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டி ருந்தது எனக்கு வியப்பாக இருந்தது.

காலையில் மூட்டைப் பூச்சி விவகாரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எஸ். பொ. சொன்னார்: 'மூட்டைப் பூச்சிகள் என் பக்கம் வாறதே இல்லை. எழுத்து உலகத்தில் பெரிய பெரிய பூச்சி களை எல்லாம் நான் நசுக்கிறவன் எண்டு உந்த மூட்டைப் பூச்சிகளுக்குத் தெரியும் கண்டியோ.'

சொன்னபடி ரஹ்மான் அவர்கள் நூலை 1964ம் ஆண்டு டிசம்பரில் முடித்துத் தந்த தோடன்றி குருப்பசிட்டியில் நடைபெற்ற விழாவிலும் பங்குபற்றிச் சிறப்பித்தார். அட்டைப் படத்தை பிரபல ஓவியர் 'சௌ' (எஸ். கே. சௌந்தரராஜா) அவர்களைக் கொண்டு அழகாக அமைத்திருந்தார். அரசு வெளியீட்டின் கவர்ச்சிக்கும் வளர்ச் சிக்கும் 'சௌ' அவர்களும் ஒரு காரண கர்த்தா ஆவர். ஆற்றல் மிக்க ஓவியர் பிற்காலத்தில் எனக்கு நண்பராக வாய்த்து, எனக்கும் என் பொருட்டு எனது பிற நண்பர்களுக்கும் பல ஓவிய உதவிகள் புரிந்தமையை மறக்க முடியாது.

ரஹ்மான் எனக்கு 'ரகு' வானார். எமது நட்பு அகம் நகு நட்பாக நிலைத்து விட்டது. கொழும்புக்குச் சென்றால் அவரைப் பாராமல் திரும்புவதில்லை. பல சமயங்களில் அவரின் வற்புறுத்தலின் நிமித்தம் அச்சகத்திலேயே தங்கியது முண்டு. அளவுக்கு மீறி அன்பு பாராட்டி உபசரிப்பார். 'கவியரங்கில் கந்தவனம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கவிதைத் தொகுதி வெளிவரக் காரணமாக இருந்தவர். அதன் சில பகுதிகளை 'ஏனிந்தப் பெருமூச்சு?' 'உய்யும் வழி' என்னும் பெயர்களில் தனி நூல்களாகவும் வெளியிட்டவர்.

ரஹ்மான் அவர்கள் உயர்ந்தவோர் இலட்சியவாதி - இலக்கியவாதி. இவர் நிர்வாக ஆசிரியராக இருந்து நடத்திய 'இளம்பிறை' மாதாந்தியை படித்தவர்களுக்கு இவரது ஒப்பற்ற இலக்கிய நோக்கங்கள் நன்கு விளங்கி இருத்தல் வேண்டும். பத்திகைக்கு இலட்சணம் பாலுணர்ச்சிப் படங்கள், பரபரப்பான செய்திகள், கேள்வி - பதில் பகுதிகள் என்றிருந்த இந்தப் 'பரம்பரை நம்பிக்கை'க்கு மாறாக, உயர்ந்த இலக்கியப் படைப் புக்களை மட்டும் நம்பியே 'இளம்பிறை'யை நடத்திக் காட்டிய இலட்சியப் பத்திரிகை ஆசிரியர் ரஹ்மான் அவர்கள்.

பலர் ஒன்றைச் சொல்லி வேறொன்று செய்வர். ஏனென்று கேட்டால், ஆபத்துக்குப் பாவமில்லை என்பர். ரஹ்மான் வித்தியாசமானவர். இலக்கிய உலகிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் இவர் ஒரு சத்தியவானாகப் பவனி வந்தவர். தொழில் நட்டம் ஏற்படினும் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதே இலாபம் எனக் கருதியவர். நேர்மை இவரது கலங்கரை விளக்கம்.

சகோதரத்துவத்துக்கு முதன்மை அளிக்கும் சமயம் இஸ்லாம். அதனைச் செயலிற் காட்டுவதில் முதன்மை வகிக்கும் சமயமும் அதுவே. ரஹ்மான் அவர்கள் எனக்கு நான்காவது சகோதரராக வாய்த்தது நான் செய்த புண்ணியம்.

*******




நடிக்க ஆர்வமுள்ள கலைஞர்கள் அழைக்கவேண்டிய
தொலைபேசி இலக்கம் 416-425-2884



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சா. கந்தசாமி எழுதும்....

# துக்வெல்காரூ

**4**

படமா இது? ஆளாளுக்குப் பாடிக்கொண்டிருந்தார்கள். மூச்சைப் பிடித்துக் கொண்டு பேசினார்கள். அழுதார்கள். திரும்பவும் பாடினார்கள்.

சாமியார் மண்ணைக் குவித்துத் தலைக்குக் கீழே வைத்துக்கொண்டு, தரையில் கிட்டத்தட்டப் படுத்துக் கொண்டு படத்தில் ஒன்றிப்போயிருந்தார். ரங்கநாதன் வெளியே தெரிகிற ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.



கூட்டுக் குடும்பம் பிரிந்து எல்லாவற்றையும் பங்கு போட்டுக் கொண்டு இருந்தார்கள். ஊரே கூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. முகம் முகமாக திரையில் நகர்ந்து போகிறது.

"நாம இருக்கிறோம் பாரும்" சாமியார் சொன்னார்.

திரையில் ரங்கனும் சாமியாரும் கூட்டத்தில் இருந்தார்கள். சாமியார் கறுப்புத் தாடியோடு. ரங்கநாதன் கையில் குடை இருந்தது.

"இருபது வருஷம் முந்தி இது..." சாமியார் நமுட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

சடாரென்று படம் அறுந்துபோக ஒற்றை பல்ப் எரிந்தது. விசிலடித்தார்கள். ஓரமாகப் போய்குந்த வைத்தார்கள். முறுக்கு விற்கிற பையன்கள் சுற்றி வந்தார்கள்.

"போகலாமா" ரங்கநாதன் கேட்டார்.

"இருமய்யா... முடியப் போறது... முடிவு தெரியாமப் போனா எனக்குத் தூக்கமே வராது..."

"முடியற மாதிரி தெரியலியே..." ரங்கநாதன் முனகினார்.

"சரி வாரும் போகலாம்" சாமியார் எழுந்து கொண்டார்.

"முடிவைப் பார்க்க விட மாட்டேங்கிறீரே அய்யா...." அவர் சலித்துக் கொண்டே வாசலுக்குப் போனார்.

உமக்குத் தெரியாதா என்ன..." ரங்கநாதன் பையில் மடித்து வைத்திருந்த கம்பளித் துண்டால் போர்த்திக் கொண்டார்.

"அதுவா வந்தாத் தான் சுவாரசியம்..."

வெளியே தூங்கிக் கொண்டிருந்த தெருநாய்கள் செருப்புச் சத்தம் கேட்டு எழுந்து குரைக்க ஆரம்பித்தன. உள்ளே இருந்து திரும்பவும் பாட்டுச் சத்தம்.

தெளிவான வானம். காற்றுதான் இல்லை. தூரத்தில் கடல் இரைகிற சத்தம்.

"உமக்குக் குளிரலியா..." ரங்கநாதன் கேட்டார்.

"படுக்கும் போது கொஞ்சம் குளிரும்..."

எங்கே படுப்பது? மணி என்ன இருக்கும்?

"படுக்கத்தானே கூட்டிட்டுப் போறேன்.... மணி என்ன ஆனா என்ன?"

"நினைக்கக்கூட விடமாட்டேங்கறீரே... உம்மகூட வரவே பயமா இருக்கு அய்யா..." ரங்கநாதன் சிரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன பண்றது... கெட்ட பழக்கம் தான்... உம்ம மனசுதான் சுத்தமாச்சே... ஏன் பயப்படணும்..."

"அது எப்படியோ போறது... எனக்கும் சேத்து நீரே நினைச்சுக்குங்க... இப்ப தூக்கம் வருது... இப்படியே துண்டை விரிச்சு படுத்தா சரிப்படுமா..."

"இங்கே வேணாமய்யா... ஆமை முட்டைபோட வரும்... அந்த மண்டபத்துக்குப் போகலாம்..."

நிலா வெளிச்சத்தில் ஈரம் பூரித்த சுவர்களுடன் நிற்கிற மண்டபம். இத்தனை நாளாக அதைப் பார்த்ததாகவே ரங்கனுக்கு நினைவில்லை.
"எல்லாம் இங்கேதான் இருக்கய்யா... ரொம்பநாளைக்கு ரொம்பநாள் முந்தி கட்டினது..."
சாமியார் சிரித்தார்.

மண்டபத்து வாசலில் ஒரே சிறுநீர் வாடை. படியேறும்போது உள்ளே ஏதோ பூ வாசனை. வராந்தாவில் போஸ்ட்கார்டுகள் சிதறிக்கிடந்தன. கறையான் அரித்த புத்தகங்கள், நோட்புக்குகள் அடுக்கியிருந்தன. ஷவரசாதனங்களும் பச்சை நிறக் கண்ணாடிக் குப்பியில் வாடையடிக்கிற எண்ணையும் ஒரு முக்காலிமேல் இருந்தது. ஈரத்தோடு ஆக்டபஸ் மாதிரி ஒரு பாதாளக்கரண்டியும் தரையில் கிடந்தது.

சாமியார் உள்ளே தலையை நீட்டிப் பார்த்தார்.

"நீர் இங்கேயே படுத்துக்கொள்ளும்... நான் உள்ளே போய் பேசிட்டு வரேன்... சீட்டு விளையாடிட்டு இருக்காங்க..."

"நானும் உள்ளே வரேன்..." ரங்கநாதன் சொன்னார்.

"சொன்னாக் கேளும்... அந்த சூழ்நிலை உமக்கு சரிப்படாது..."

பக்கத்தில் சார்த்தி வைத்த விளக்குமாறை எடுத்து சரசரவென்று பெருக்கினார் சாமியார்.

ஜினுஜினுவென்று கடலிலிருந்து காற்று வீச ஆரம்பித்தது.

ரங்கநாதன் பையைத் தலைக்குக் கீழே வைத்துக்கொண்டு தூங்க முற்பட்டபோது சாமியார் உள்ளே போகிறதைப் பார்த்தார்.

"இன்னுமா நீங்க போகலே..." சாமியார் சத்தமாகச் சிரித்துக் கொண்டே கேட்டது காதில் விழுந்தது.

பதில் வருவதற்குள் ரங்கநாதன் தூங்கியிருந்தார்.

அடுத்த இதழில் தொடரும்...

உங்களின் சிறந்த புடவைத் தெரிவுகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
6 Kumars
SILK HOUSE
1394 GERRARD ST. E., TORONTO, ON
TEL: (416) 465-7131



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வாங்குவது ஒரு நல்ல முதலீடா?

*முதல் முறையாக வீடு வாங்குபவர்கள் அறிந்திருக்க வேண்டிய முக்கிய மூன்று விடயங்களை இதற்கு முந்திய ரோஜா இதழில் எழுதியிருந்தேன். அதை வாசித்த நேயர்களின் வேண்டுகோளுக் கிணங்க இந்த இதழில் எழுதுகிறேன்.*

*கரு. கந்தையா*



கடந்த முப்பது வருடத்தில் பல்வேறு முதலீடுகளிலும் இருந்து கிடைத்த பலன்களை ஆராய்ந்த போது வீடு என்பது நீண்டகால முதலீட்டில் அதிகூடிய பலனைத் தந்திருப்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆதாரபூர்வமாக அறிந்துள்ளார்கள். பொருளாதார ஏற்ற இறக்கங்களைத் தாண்டியும் இப்படிப் பலன் கிடைக்கிறது என்பதை அறியும்போது நாமும் அதனைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

வீடுகளின் விலை ஏறியுள்ள 88-89ம் ஆண்டுப் பகுதிகளில் பலர் வீடு வாங்கிப் பின் கஷ்டப்பட்டதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஏன் அப்படி நடந்தது.

* அவர்கள் இது நீண்டகால முதலீடு என்ற நோக்கத்தில் செய்யவில்லை. அதற்கு சில வருடங்களுக்கு முன் வாங்கியவர்கள் விற்றுத் திடீரென்று லாபம் சம்பாதித்ததைப் பார்த்த ஆசையில் வாங்கியவர்கள் தான் பலர்.

* சந்தையில் மலிந்த போதுதான் பொருட்களை வாங்க வேண்டும். அதை விலையேறிய போதுதான் விற்கவேண்டும் என்ற சாதாரண தத்துவத்தை அசட்டை செய்தார்கள்.

* இது மாத்திரமல்ல அக்காலத்தில் உள்ள வங்கி கடன் தரும் அமைப்பும் அவர்களைக் கஷ்டப்படுத்தியது உண்மைதான். முன்பு வீடு வாங்கும்போது கால்வாசி முதலிட முடியாதிருந்தால் (25% Down Payment) ஒரே கடனாக வங்கியில் எடுக்க முடியாது. 75% விலையை ஒரு வங்கியிலும் மிகுதித் தேவையான பணத்தை தனியாரிடம் அதிகூடிய வட்டிக்கும் பெறவேண்டிய நிலை. இது மாதம் மாதம் கடனுக்கு செலுத்தும் கட்டணத்தை கூட்டி வைத்தது. ஆனால் இப்போது நிலை வேறு. ஐந்து வீத முதலீட்டுடன் ஒரே வங்கியில் குறைந்த வட்டியிலேயே கடன்பெறக்கூடிய நிலையை அரசாங்கம் வழிவகுத்துத் தந்துள்ளது.

வீடு வாங்கியிருப்பவர், வாடகைக்கு இருப்பவரைவிட என்ன வீதத்தில் நன்மையடையக் கூடும் என்பது எல்லோர் மனதிலும் எழுகின்ற கேள்வி. உதாரணத்திற்கு வாசன், சோதி இரு நண்பர்களை எடுத்துக் கொள்வோம்.

வாசன் வாடகைக்கு இரண்டு படுக்கை அறையுள்ள appartment இல் மாதம் $750 செலுத்தி வசித்து வருகிறார் என வைத்துக் கொள்வோம். அவரது வாடகை வருடம் ஐந்து வீதப்படி உயர்கிறது எனக் கொண்டு பார்த்தால் அடுத்த 25 வருடத்தில் அவர் கட்டிய மொத்த வாடகை $430,000.

சோதி சொந்தமாக ஒரு மூன்று படுக்கையறை வீட்டை $145,000 விலைக்கு வாங்கினார் என்று வைத்துக் கொள்வோம். மாதக் கட்டணம் $900 எனக் கொண்டால் 25 வருடத்தில் அவர் கட்டிய மொத்தத்தொகை $270,000.

அதாவது சொந்த வீடு வைத்திருப்பவர் சேமித்த பணம் $160,000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அதை விடுவோம். 25 வருடத்தின் பின் இவர் நிலையை உற்று நோக்குவோம். வாசன் அடுத்த மாத வாடகைக்கு $2400 உழைக்க வேண்டிய நிலையிலுள்ளார். சோதி வங்கிக்கடன் முழுவதும் கட்டி முடித்து கடன் இல்லாமல் இருக்கின்றார். அதை விட சோதியின் வீடு வருடம் 5வீதப்படி ஏறியிருந்தால் தற்போதைய பெறுமதி $470,000. அந்த வீட்டை விற்றால் வரும் பணம் $470,000 அவருக்குக் கிடைக்கிறது. சரி 5 வீதப்படி விலை ஏறவில்லை. ஏன் விலையே ஏறவில்லை என வைத்துக் கொள்வோம். வாங்கிய விலைக்கு $145,000 இற்கே விற்கட்டுமேன். சோதியின் நிலைமை (160,000+145,000) = $305,000 இனால் வாசனை விட நல்ல நிலைமையில் இருக்கிறார் என்பதை அவதானியுங்கள்.

நீங்கள் யாரை ஆதரிப்பீர்கள் என நீங்களே முடிவு செய்யுங்கள்.

* வீடு உங்களைக் கட்டாயம் சேமிக்க வைக்கிறது. ஒவ்வொரு முறை நீங்கள் morgage க்குக் கட்டும் பணத்தில் ஒரு பகுதி முதலாக உங்கள் பெயரில் சேமிக்கப்படுகிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

* வசித்த வீட்டை விற்கும்போது லாபம் ஏற்பட்டால் அதற்கு வரிகட்ட வேண்டிய தில்லை என்பதையும் மறந்து விடாதீர்கள். வேறு எந்தத் தொழிலிலும் லாபம் ஏற்பட்டால் வரிகட்ட வேண்டியது அவசியம்.

நீங்கள் வீடு வாங்கத் தயாரா?

கீழ்வரும் கேள்விகளை உங்களையே கேட்டுப் பாருங்கள்.

*1. கடந்த காலங்களில் பணம் சேமித்துள்ளீர்களா? அச்சேமிப்பு வீடு வாங்க (Down payment) போதுமானதா?*

*2. சொந்தமாக வீடு ஒன்றை வாங்கிப் பராமரிக்க விரும்புகிறீர்களா? அதற்காக சிறிது அதிக தொகை செலவழிக்க வேண்டியிருந் தாலும் தயார் என்கிறீர்களா?*

*3. உங்களது கடன் பெறும் தகைமை (credit rating) நன்கு உள்ளது என்கிறீர்களா?*

*4. எனது குடும்பத்திற்காக, பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக நீண்டகால சேமிப்பில் ஈடுபடத் தயார் என்கிறீர்களா?*

இந்தக் கேள்விகளில் அதிகமான கேள்வி களுக்கு ஆம் என்று பதில் அளிக்கும் நிலையில் இருந்தால் நீங்கள் வீடுவாங்கத் தயார் என்பதே அர்த்தம்.

நீங்கள் வாடகை செலுத்திக்கொண்டு பல வருடங்கள் இருந்துவிட்டதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் செலுத்தும் வாடகைப் பணம்தான் வீட்டுச் சொந்தக்காரர் Mortgage கட்டப் பயன்படுகிறது. இன்னும் சில வருடங்களில் அவரது கடனை ஒழித்து அவருக்கு அந்த வீட்டைச் சொந்தமாக வாங்கிக்கொடுப்பதைத்தான் நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

அடுத்த இதழில் தொடரும்...





பிரதான இணைப்பு இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| திருமணசேவை | 0000 | |
| விளம்பர அகராதி | 1111 | ➡ 'எல். கிரிஷோத் ரைப்செட்டிங்' - 7903 |
| ஆலயம் | 2222 | |
| நகர்வலம் | 3333 | |
| சினிமா | 4444 | |
| மீடியா | 5555 | ➡ 'ரோஜா' - 5569 |
| மலிவு விற்பனை | 6666 | |
| புதிய குடிவரவாளர்கள் | 7777 | |
| உலகவலம் | 8888 | |
| ஆதவன் பப்ளிக்கேஷன்ஸ் | 9999 | |

தமிழன் வழிகாட்டி

ஆதவன் பப்ளிக்கேஷன்ஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் பேசமாட்டாள்!
அ என் தங்கை கல்யாணி.....?

எட! எட! சோம்பேறி என்ன? என்ன? பராசக்தி வசனம் பேசிறா. கனடா நாட்டுக்கு அடிக்கவேணும் செருப்பாலை. முருங்கைமரம் பருத்து தூணுக்கு உதவாது. நல்ல உடம்பு இருக்கு, தொழில் கிடையாது; ஊர் சுத்திக்கொண்டு திரியிறா. ஊதாரிக்குப் பிறந்தது. எங்கை சாக்கடை கிடக்கு எண்டு கிளற நிக்கிது. ஊரிலை போய் நாட்டைக்காக்க போவன் வீரச்சாவாவது கிடைக்கும். சரித்திர புத்தகத்திலேயாவது போடுவாங்கள். இஞ்ச இருந்தியோ தரித்திர புத்தகத்தில்தான் பெயர் வரும். விடியக்காலமை எழும்பி வேலைவெட்டிக்குப் போவம் எண்டு நினைக்கவில்லை பராசக்தி வசனம் பேசுது......
ராசுக்குட்டியர் தொடர்ந்துகெண்டே போனார்.

"அப்பு........ இஞ்சை வீணா என்ரை விசயத்திலை தலையிடாதை. நான் இப்ப இஞ்சை நடக்கிற பிரச்சினையை சீர்திருத்த நாடகம் போட்டு சம்பந்தப்பட்டவையை கிழிக்கபோறன். அதுவும் ஒரு தொண்டு தானே. எங்கடை சமூகம் சீரழியப்போவது காப்பாத்த வேணும்"

ராசுக்குட்டியரை தொடர விடாமல் கத்தினான் ராசுக்குட்டியரின் இரண்டாவது மகன் பாலசுப்பிரமணியம்.

"சமூகம் சீரழியிறதுக்கு முன்னம் ஊரிலை இருக்கிற சனத்தை காப்பாற்று. சனம் இல்லாமல் சமூகம் எப்படி வரும்" கேட்டார் ராசுக்குட்டியர்.

அப்பு என்னை என்ன அங்கைபோய் சாகச்சொல்லிறியே? கேட்ட பாலாவைத் தொடர்ந்த ராசுக்குட்டியர்; "சாகச்சொல்ல இல்லை ஏலுமான அளவு முயற்சிசெய் முடியாவிட்டால் வீரச்சாவு. அது உனக்கும் பெருமை நாட்டுக்கும் பெருமை" என்றவரை தொடர்ந்த பாலசுப்பிரமணியம் "அப்பு! நீ உந்த 24 மணித்தியால ரேடியோவிலை என்ன கேக்கிறனீ. நடக்கிற பிரச்சனைகளைக் கேளன் அப்பதானே தெரியும்."

"என்ன... என்ன... பிரச்சனையை இப்ப கண்டனீ?" கேட்டார் ராசுக்குட்டியர்.

"கோயில்லை ஐயர் சுகயீனமுற்ற ஒரு பிள்ளையை விட இல்லையாம். கேக்க தேகம் எல்லாம் புல்லரிக்குது. அதுதான் பராசக்தி வசனம் பேசி கிழிக்க போறன்.

எட ராசா! தம்பி! பன்னாடை...., கள்ளுக்கு வடிக்கிற பன்னாடை கள்ளு வடிக்கேக்கை

## டொன்மில்ஸ் சிவப்பிரகாசத்தின்...
# ராசுக்குட்டி அய்யா
## காகம்!
## கா... கா.... கா....



மிஞ்சிற சல்லடைதான் நீ" எண்ட ராசுக்குட்டியரை இடைமறித்த பாலசுப்பிரமணியம் "அப்ப ஐயர் செய்தது சரியெண்டு சொல்லுறியே அப்பு."

"எட ஐயர் செய்தது சரியோ பிழையோ எண்டு நான் சொல்ல வர இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலை, ஊரிலை எத்தனையோ பிரச்சனையள் இருக்கேக்கை ஏனப்பு ஐயரையும் பூசாரியையும் வம்புக்கு இழுக்கிறா?"

"அப்பு கோயில் பொதுச் சொத்து அதுக்கை நுழைய எல்லாருக்கும் உரிமை இருக்கு. ஐயர் ஆர் அதைத் தடுக்க?" என்று உணர்ச்சிவசப்பட்ட பாலசுப்பிரமணியத்தை இடைமறித்த ராசுக்குட்டியர் எடே.... எடே.... பாலசுப்பிரமணி உணர்ச்சிவசப்படாதை. நான் சொல்லுறதையும் கொஞ்சம் கேள் தம்பி" என்றவர்

"அண்டைக்கு நான் வருசப்பிறப்பு அண்டு கோவிலுக்கு போனன் கண்டியே. இனி அந்த கோயிலுக்கு போறதில்லை எண்டு திரும்பி விட்டன். "ஏன் உன்னையும் ஆரும் தடுத்தவையே?" ஆவலாகக் கேட்ட பாலசுப்பிரமணியத்தை தொடர்ந்த ராசுக்குட்டியர் "இல்லை ராசா. பாலசுப்பிரமணி! அண்டைக்கு கோயிலுக்குப்போய் மூண்டுதரம் எல்லா விக்கிரகங்களையும் சுத்தி கும்பிட்டுப்போட்டு அப்னே முருகா எண்டு போட்டு ஆசைதீர சப்பணம் போட்டபடி இருந்தன் பார். ஒரே பிணநாத்தம் மூக்கை பிடுங்கிச்சுது. எடே கோயிலுக்கை இந்த நாத்தம் எண்டு நினைச்சு சுத்தி சுத்திப் பாத்தன் எட இளவு எனக்குப் பக்கத்திலை என்ரை வயசுக்காரன் தன்னை மறந்து காலுக்கு மேல் கால் போட்டபடி, திருவாசகம் ஒண்டை முணுமுணுத்தபடி ஒரு காலை தாளம் போட்டபடி ஆட்டிக்கொண்டிருந்தார். அவற்றை ஒவ்வொரு ஆட்டலுக்கும் கால் சொக்ஸிலை இருந்து (இரண்டு வங்காள விரிகுடா மாதிரி ஒட்டை வேறை) பூஸ்.. பூஸ்.. எண்டு பிணநெடி வீசிச்சுது கண்டியோ? மனுஷன் கனடாவுக்குவந்தநாள் வாங்கினவர் போல. அது பாட்டுக்கு இவர் காலோடை வலு ஐக்கியம்" என்று சற்று நிறுத்திய ராசுக்குட்டியர் "எட என்னை உனக்குத் தெரியுந்தானே. சாடையா தட்டி பெரியவர் "யானையின் பலம் யானைக்குத் தெரியாது எண்டு சொல்லுவினம் கேள்விப்பட்டனியளே எண்டு கேட்டன். திடுக்கிட்டவர் "ஓ... ஓ... தெரியும்" எண்டார்.

"அதுபோல பாருங்கோ உங்கடை கால் சொக்ஸ் மணம் உங்களுக்குத் தெரியேல்லை. ஆனா அது இஞ்சை பலபேருக்கு சகிக்கமுடியேல்லை எண்டன். மனுஷனுக்குக் கோவம் வந்திட்டுது "எப்பவும் தமிழன் மற்றவன்ரை என்னத்திலையோ என்னமோ ஒட்டிக்கொண்டிருக்கு எண்ட கதையா வெளிநாட்டிலை வந்தும் அதைத்தான் பாக்கிறான். *peace of shit!* எண்டு தனக்கு இங்கிலீசும் தெரியும் எண்டு சொல்லிப்போட்டு எழும்பி பரக்க பரக்க போட்டார் கண்டியே என்ற ராசுக்குட்டியரைத் தொடர்ந்த பாலசுப்பிரமணி ஏன் அப்பு உன்ரை வாயை கண்டபாட்டுக்கு விடுகிறனீ. உதாலைதானே ராசுக்குட்டியர் எண்டா எட இவன் விதர்பமன் பிடிச்சவன் என்று சொல்லுகினம் என்றவனை இடைமறித்த ராசுக்குட்டியர் எடே சிலரை தாய் தகப்பன் திருத்தவேணும் அதுவும் இல்லையெண்டா ஆராவது திருத்தவேணும். இல்லை எண்டா கோயிலுக்கு வாற சனத்திலை பாதி வராது கண்டியே

எட ஒரு டொலருக்கு ஐந்து எண்டு விக்கிறாங்கள். இதை மாத்தினா தான் என்ன?

உதுகளை நிப்பாட்டு. அதுவும் ஒரு சமூகசேவைதான். எட நான் என்னத்தையோ சொல்ல வந்து இப்ப என்னத்தையோ சொல்லிப்போட்டன் என்ற ராசுக்குட்டியர் தான் விட்ட இடத்துக்கு வந்தார்.

எட தம்பி நான் இதை ஏன் சொன்னான் எண்டா... என்று இழுத்த ராசுக்குட்டியரைத் தொடர்ந்து இப்பிடி, இப்பிடி சின்ன பிரச்சனைகள் வாறது சகஜம் பார்.

மதகுருமார் எண்டா தெய்வங்களுக்கு சமமானவங்கள். எங்கடை பிறதேர் சிங்களவனைப்பார், பிக்குமார் பாஞ்சாலையமுக்கை எத்தினை தில்லுமுல்லுகளை செய்யினம். நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள நாட்டிலை வாழ்ந்தனான் பார். அங்கை வழமான வாழ்க்கை, ஒவ்வொரு நாளும் தானம், தானம் எண்டு ஒவ்வொரு வீடுகளிலும் இருந்து ஒசி சாப்பாடு சாப்பிட்டும், அங்கை நான் வாய்திறந்து சொல்லமுடியாத தில்லுமுல்லுகள் ஏன் அங்கை போறா இஞ்சை இந்த நாட்டிலை என்ன வெளிநாட்டிலும் மதகுருமார் செய்யிற தில்லுமுல்லுகளை ஏதும் புகைஞ்சாலும் தண்ணியை ஊத்தி அணைச்சு போடுகினம்.

*TALK... TALK...* எண்ட நாலு எழுத்துக்கு மதிப்பு இருக்கு. அது ஒரு சன்னம் இல்லாத துவக்கு. ஏன் மனசுக்கை வைச்சு பாரத்தை சுமப்பான் இறக்கு. நாங்கள் விடுகிற பிழையும் இதுதான் ராசா என்ற ராசுக்குட்டியர் தொடர்ந்து இஞ்சை தான் எத்தினை மன்றங்கள் இருக்கு. எத்தனை பேர் சைவசமய பெரியவை எண்டு தங்களை சொல்லிக் கொண்டு தங்களை சுத்தி ஒவ்வொரு வட்டங்களை போட்டுக்கொண்டு தங்களுக்குத் தாங்களே மாறி மாறி மாலையளை போட்டுக்கொண்டு புகைப்படம் எடுத்து பத்திரிகைகள் அடிச்சு அதிலை போட்டு அழகு பார்க்கும் சைவ பெரியார்கள் ஏன் இப்படியான விஷயங்களில் தலையிட்டு சம்பந்தப்பட்டவையை கூப்பிட்டு ஒரு சமூகமாகத் தீர்க்கலாம் தானே. அவை இதுகளுக்கு வரமாட்டினம் உன்னைப்போல என்னைப்போல உள்ளவை உணர்ச்சிவசப்பட்டு ரேடியோவிலை பேசினா தலையாட்டி ரசிப்பினை. வேற என்ன அவர்களாலை முடியும்? ராசுக்குட்டியர் உணர்ச்சிவசப்பட்டார்.

தன்னை சமாளித்து சாந்தப்படுத்தியவர் எட பாலசுப்பிரமணி மனிதர்களுக்காகத் தான் கோயில். கோயிலுக்காக மனிதர்கள் இல்லை. அதை நானும் ஒத்துக் கொள்ளுறன். அதுக்காக எடுத்த உடனே பழைய பராசக்தி வசனம் பேசி நானும் நடிகர் திலகம் ஆகிவிட்டேன் என்ற கருத்து வரக்கூடாது. அதுக்குப் பின்னாலையும் புதிய பராசக்தி உதயமாகும் என்பதையும் மறக்கக்கூடாது.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த பாலசுப்பிரமணி சரி அப்பு இப்ப உன்ரை கருத்து என்ன? ஆர் செய்தது சரி?

எட பிறகும்பார் விடிய விடிய கதை கேட்டுப் போட்டு ராமன் சீதைக்கு ஒண்ட விட்ட சகோதரனோஎண்டு கேட்கிறா என்ற ராசுக் குட்டியர் பிழை சரி பார்த்துக்கொண்டு பட்டி மன்றம் போடுகிற பிரச்சனையில்லை இது வருங்காலத்திலை இப்படியான நிலையள் ஏற்படாமல் இருக்க வழி செய்யிறதுதான் சிறந்தது. முக்கியமாக கனடாவின் நிலை யறிந்து அதற்கேற்ப சில விடயங்களை மற்றவர்களின் மனம் கோணாமலும் துன்பப் படாமலும் ஆண்டவன் எல்லோருக்கும், என்ற உணர்வுடன் மற்றய குருமாரும் கலந்து ஆலோசித்து நோய்வாய்ப்பட்டவர் களுக்கும் மனதில் ஆயிரம் கவலைகள் இருக்கும். அவர்களும் தங்கள் சுமைகளை ஆண்டவன் பாதத்தில் இறக்கி அவர்களும் மற்றவர் களைப்போல் சமமாக ஆண்டவன் சந்நி தானத்துக்கு வந்து அவன் அருள்பெற வழி செய்ய வேண்டும் என்பதைத்தான் நானும் விரும்புகிறேன். நிச்சயமாக அது நடக்கும்.

★★★★★


புன்னகை பொன்னகையைவிடச் சிறந்ததல்லவா.... உங்கள் பற்களை பாதுகாருங்கள்!

**ஸ்காபுரோ பல் வைத்திய நிலையம்**

**டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம்**

**& சகாக்களும்**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 - மாலை 9.00 மணிவரை

**2155 Lawrence Av.E., Suit 10, (at Birchmount) Tel: 416-750-9969**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GASA Restaurant

இலங்கை, இந்திய, கனேடிய உணவகம்

## Take Out & Catering

உங்கள் அனைத்து வைபவங்களிற்கும் நீங்கள்
விரும்பிய உணவுகளையும் சிற்றுண்டி
வகைகளையும் சுவையுடன் செய்து தருகிறோம்.

## சுவை, அது GASA!!!

மலிவு விலையில்....

| | |
|---|---|
| * Rice with 4 Veg. + 1 Meat Curry | $4.75 |
| * 10 Chicken Wings with Fries | $3.99 |
| * 5 Chicken Wings with Fries | $1.99 |
| * கொத்துரொட்டி (ஆடு, மாடு, கோழி) | $3.99 |
| * 2 ரொட்டி + கறி | $2.99 |

**Tel: (416) 321-1219**

2950 Kennedy Road, Unit. 3
(Kennedy & North of Finch)
Scarborough, ON






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## டிஜிடல் ஒலியமைப்பு

"டிஜிடல் சவுண்ட் உடன் படம் பார்த்தால்தான் பார்த்த மாதிரி இருக்கும்." "புதிதாக வந்திருக்கும் படம் டிஜிடல் சவுண்ட் உடன் வந்திருக்கிறதாம்." "தமிழிலேயும் டிஜிடல்சவுண்ட் படம் வந்திருக்கிறது." இப்படி நம்மிடையே பலர் பேசிக்கொள்வதைக் கேட்டிருப்பீர்கள். ஜுராசிக் பார்க், ட்ரு லைஸ் போன்ற ஆங்கிலப் படங்களை டிஜிடல் ஒலியமைப்புடன் நீங்கள் பார்த்திருக்கவும் கூடும். நாயகனை வில்லன் துப்பாக்கியால் சுட்டபோது சிதறிய கண்ணாடித் துண்டொன்று உங்களுக்கு அருகிலே விழுந்தது போன்று (ஒலி) உணர்ந்திருப்பீர்கள். துப்பாக்கிச் சன்னங்களின் ஒலி காதை ஒட்டியவாறு சென்றது போலவும் உணர்ந்திருப்பீர்கள்.

இதே போன்று; காண்பிக்கப்படும் காட்சியில் நம்மை ஒன்றிப் போகவைத்து, திரை உலகுக்கே நம்மை அழைத்துப் போக வைக்கும் டிஜிடல் ஒலியமைப்புப் பற்றிப் பார்ப்போம். அதற்கு முன்னர் சாதாரண திரைப்படங்களில் ஒலி எவ்வாறு பதிவுசெய்யப்படுகிறது, எவ்வாறு பார்வையாளர்களை வந்தடைகின்றது என்பது பற்றி.........




இது ஒரு வழமையான திரைப்படச்சுருளின் ஒரு பகுதி. இங்கு சுருளைக் கவ்வும் துவாரங்களுக்கும் படத்திற்கும் இடையே மெல்லிதான அலைபோன்ற ஒன்றை அவதானித்திருப்பீர்கள். இங்கு ஒலி, ஒளி அலைகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒளி அலைகளை உணரக்கூடிய கருவி ஒன்றின் மூலம் இவ்வொலியலைகள் உணரப்பட்டு ஒலிபெருக்கி மூலம் பெரிதாக்கப்பட்டு நமது காதுகளை வந்தடைகின்றது.

இவ்வகை ஒலியமைப்பில் ஒலியானது திரைக்கு முன்புள்ள பகுதியை நிறைத்திருக்கும். அந்த நேரத்தில் இடப்பக்கமிருந்து புறப்படும் ஒரு கார் திரையைக் கடந்து வலப் புறமாகச் செல்லும் போது ஒலியும் அதே திசையில் சென்றிருக்காது.




டிஜிடல் ஒலியமைப்புடன் வருகின்ற ஒரு திரைப்படத்திற்கான அறிவிப்பில் "DTS" என்ற குறி காணப்படும்.(Digital theatre sound)

இந்த டி.ரீ.எஸ் ஒலியமைப்பிற்கும் சாதாரண ஒலியமைப்பிற்கும் என்ன வேறுபாடு? DTS ஒலியமைப்புடனான திரைப்படத்தில்

கருணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலப்புறமிருந்து இடப்புறமாக ஒரு வாகனம் செல்லும்போது ஒலியும் அதே திசையில் செல்லும். டி.ரீ.எஸ் ஒலியமைப்புடன் வெளிவரும் திரைப்படச்சுருளில் துவாரங்களுக்கு இடையேயான பகுதியில் ஒருவகை நேரப்பதிவு (Time code) பதிவுசெய்யப்பட்டிருக்கும்.

இந்தப் பகுதியிலிருந்து கணனிக்கு தகவல்கள் பெறப்பட்டு அந்தப் பிரேமிற்கேற்ற ஒலி CD ஒன்றிலிருந்து பெறப்படும். ஆக இவ்வகை ஒலியமைப்பில் வெளிவரும் திரைப்படத்திற்கு திரைப்படச்சுருளுடன் CD ஒன்றும் ( ஒன்று அல்லது இரண்டு) தரப்படும். இரண்டுவகை டி.ரீஎஸ் ஒலியமைப்புகள் காணப்படுகின்றன.
DTS-S (அல்லது DTS-4), DTS-6 ஆகியவை. DTS-S ஆனது 4 Matrix-Channels இனூடாக ஒலியைத்தரும். அதாவது இடப்புறமிருந்து ஒன்று, வலப்புறமிருந்து ஒன்று, நடுப்புறமிருந்து ஒன்று, திரையரங்கு முழுமைக்கும் ஒன்று என 4 Channels இனூடாக ஒலி நம்மை வந்தடையும். இவ்வகை ஒலியமைப்பின் தரம் நீங்கள் அடிக்கடி காணும் dolby stereo வகையை ஒத்திருக்கும்.

அடுத்த வகை DTS-6. இவ்வகையில் 6 Channels இனூடாக ஒலி நமக்குக் கிடைக்கிறது. ( இடம் வலம், நடுப்புறம்(centre), இடப்புறச் சூழ்வு(left surround), வலப்புறச் சூழ்வு(right surround), சப்வூபர் (Subwoofer) என 6 வகையாக அமையும். DTS-4 வகையில் ஒரு CD யே ஒலி பதிவு செய்யப் பயன்படுத்தப்படும். ஆனால் DTS-6 வகையில் இரண்டு CD கள் ஒலியைப் பதிவு செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. மிகத் தெளிவான இவ் ஒலியமைப்பு உங்களை திரைப்படம் நடைபெறுகின்ற இடத்திற்கே அழைத்துச் செல்லும்.

இவ்வகை DTS முறையில் பதிவு செய்யப்பட்ட படச்சுருளை DTS ஸிஸ்டம் இல்லாத திரையரங்கில் எவ்வாறு காண்பிக்கலாம்? உதாரணமாக இலங்கையிலுள்ள DTS வசதியற்ற ஒரு திரையரங்கில் இத்திரைப்படத்தைப் பார்க்வே முடியாதா? முடியும்! இவ்வகை DTS பிலிம் சுருள்களில் வழமையான ஒலியிழை ஒலியமைப்பையும் தன்னகத்தே கொண்டே அமைக்கப்படுகின்றன. DTS வசதியற்ற திரையரங்கில் சாதாரண ஒலியமைப்பில் படத்தை இரசிக்கலாம். DTS வசதி கொண்ட ஒரு திரையரங்கில் காணப்படும் புரொஜெக்டரில் இந்த நேரப்பதிவை உணர்கருவி (Time code reader) காணப்படும். பிரேம்களுக்கு பக்கத்தில் இருக்கும் நேரப்பதிவை தகவல் கருவியூடாக கணனி அறிந்துகொள்ளும். அதிலிருந்து சரியான CD, சரியான பிரேமிற்கான ஒலி என்பவற்றை கணனி உணர்ந்து கொள்ளும்.

அப்படியானால் இடையே சில பிரேம்கள் வெட்டி எடுக்கப்பட்டு விட்டன அல்லது தவறான ஒரு CD ஐ கொடுத்து விட்டோம் என வைத்துக்கொள்வோம். இப்போ கணனி என்ன செய்யும்? உடனடியாக DTS இலிருந்து சாதாரண ஒலியமைப்பிற்கு மாற்றிக்கொள்ளும். பின்னர் சரியான பிரேம்கிடைக்கும்போது அல்லது சரியான


உங்கள் அனைத்துத் தேவைகளையும்
பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

1670 Victoria Park Ave.,
Toronto, Ont.
Tel: (416) 757-1091

PRINCESS PLAZA வில்
துவாரகாஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CD கிடைக்கும்போது மீண்டும் DTS இற்கு மாற்றிவிடும். ஆக சில பிரேம்கள் காணாமல் போனாலோ, CD தொலைந்தாலோ தவறான CDஐ கொடுத்தாலோ எவ்வித இடையூறுமின்றி படத்தை காண்பிக்கலாம்.

சாதாரண திரையரங்கை DTS வசதியுடைய திரையரங்காய் மாற்றுவதற்கு முதலில் புரொஜெக்டர் DTS உணர்திறண் உடையதாய் மாற்றியமைக்கப்பட வேண்டும். ஒலிபெருக்கிகள் சரியான இடத்தில் அமைக்கப்படவேண்டும். அப்போதுதான் இடப்புறமிருந்து வலப்புறமாக முன்னேறும் ஒலியை அதே விதத்தில் கேட்கமுடியும். வெளி ஒலி உள்ளே வராதவாறு தடுக்கப்படல் வேண்டும். இவ்வகை DTS ஒலி மூலம் வெளிவந்த முதல்திரைப்படம் ஜுராசிக் பார்க் ஆகும். டைனசோர்களின் ஆர்ப்பாட்டங்களை டிஜிடல் ஒலியமைப்பு மூலம் கேட்டுப்பார்த்திருப்பீர்கள். இத்திரைப்படம் வெளிவந்த போது விசேட சலுகைகள் மூலம் DTS அமைப்புக்கு மாற்றும்படி தியேட்டர் உரிமையாளர்களை ஊக்கப்படுத்தினார்கள். இப்போதும்கூட $10,000 செலவுடன் நீங்கள் சாதாரண புரொஜெக்டரை, DTS புரொஜெக்டராக மாற்றமுடியும்.


## தெரியாவிட்டால்.....
## தெரிந்து கொள்ளுங்கள்!

** Traffic signal- முறை எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?*

முதல் Traffic signal பொருத்தப்பட்டது லண்டனில். 1868ல் பொருத்தப்பட்டது. காஸ் லைட்தான். கொஞ்சநாள் கழித்து, அது வெடித்ததில் ஒரு பொலிஸ்காரர் மரணம். Electric Traffic signal அமெரிக்காவில், OHIO மாநிலத்தில் 1914ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு பொலிஸ் Officer பக்கத்தில் நின்று மாற்ற வேண்டும். 1924ல் Automatic Traffic signal அறிமுகப்படுத்தப்பட்டது.

தொகுப்பு- செல்வி

ரோஜா.
மொன்றியல் தொடர்புகளுக்கு:
கே.ரி. சண்முகராஜா
(சண்)
(514) 747-5931




இனி சோனி (SONY) நிறுவனம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள SDDS ஒலியமைப்புப் பற்றிப்பார்ப்போம். மிகச்சில திரைப்பட மாளிகைகளே இவ்வகை ஒலியமைப்பிற்கு மாற்றப்பட்டுள்ளன. SDDS என்பது Sony dynamic digital sound ஆகும். இவ்வகை ஒலியமைப்பில் 8 சனல்கள் மூலம் ஒலி வெளிவருகிறது. SDDS ஒலியமைப்பில் SD யிலல்லாது படச்சுருளின் இரு ஓரங்களிலுமே ஒலி பதியப்படுகிறது. இந்த ஒலியமைப்புடன் முதலில் வெளிவந்த படம் "In the line of the fire" ஆகும்.

இனி வரும் காலங்களில் இவ்வகை ஒலியமைப்பே பிரபலமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. வெளிவந்த மறுவாரமே தமிழ்த் திரைப்படத்தை வீடியோவில் பார்ப்போருக்கு DTS என்ன SDDS என்ன?!

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லட்சியப் பாதையை நோக்கி...

அன்று காந்தனுடைய 16 ஆவது பிறந்தநாள். அவனுடைய மாமா, மாமி உட்பட நண்பர்கள் அனைவரும் கூடி நின்று அவனை வாழ்த்தினார்கள். அவனும் மிக மகிழ்ச்சியோடு கேக்கை வெட்டி தனது மாமாவிற்கு ஊட்டப்போகும் வேளை (இதுவரை அவன் தன் மனதிற்குள் அடக்கி வைத்திருந்த சோகத்தை அவனால் இனிமேலும் அடக்க முடியாமல் கண்ணீர் வந்தது) அவனுடைய கண்ணீருக்குக் காரணம் என்ன என்பதை அவனுடைய மாமா மட்டுமே புரிந்து கொண்டார். மற்றவர்கள் எல்லோரும் நினைத்தார்கள், இது அவன் கனடாவிற்கு வந்து வாழ்ந்த ஆறு வருடங்களில் முதன் முறையாகக் கொண்டாடும் பிறந்ததினம். ஆகையால்தான் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறான் என்று. காந்தன் விக்கி... விக்கி.. அழுதபடியே கேக்கை தனது தாய் தந்தையருக்கு ஊட்டுவதாக எண்ணி மாமா மாமிக்கு ஊட்டினான்.

பிறந்த தினக் கொண்டாட்டங்கள் முடிவடைந்து நண்பர்கள் அனைவரும் வீடு திரும்பிய பின், காந்தனுடைய மாமா அவனைப்பார்த்து "காந்தா உன்னுடைய சோகம் எனக்குப் புரிகிறது. தாய் தந்தை சகோதரர்களிடம் இவ்வளவு பாசம் வைத்திருக்கும் நீ, அவர்கள் உன்னை இங்கு அனுப்பிய காரணத்தை மறந்து ஏன் துஷ்டர்களோடு கூடி உன் வாழ்வை நீயே அழித்துக் கொண்டிருக்கின்றாய்" எனக் கேட்டார். அதற்கு அவன் ஒன்றுமே பேசாமல் போய்விட்டான்.

சில மணித்தியாலங்களுக்குப் பின் அவனுடைய மாமி அவனிடம் சென்று "காந்தா ஏன் நீ இன்று சோகமாய் இருக்கிறாய், ஏன் அழுதாய்" என கேட்டார். அதற்குக் காந்தன் அழுதபடியே, "மாமி இன்று நான் உங்களுக்கும் மாமாவிற்கும் கேக் ஊட்டும்போது, அன்று எனது ஒன்பதாவது பிறந்த தினத்தின் போது எனது அம்மா அப்பாவிற்கு கேக் ஊட்டிய ஞாபகம் வந்தது. அதுதான் அழுதனான். என் அம்மா இல்லாமல் எப்படி எனது பிறந்த தினத்தை சந்தோஷமாக கொண்டாடுவேன்" எனக்கூறியபடி கண்கலங்கினான். உடனே அவன் மாமி ஆறுதல் கூறிவிட்டுச் சென்றார்.

பல நாட்களுக்குப் பின் அவனுடைய பெற்றோரிடமிருந்து கடிதம் வந்தது. அவன் அதை மிக ஆவலோடு பிரித்துப் படித்தான். அதில் அவன் மூத்த சகோதரன் சூடுபட்டு இறந்து விட்டதாகவும், இப்போது அவர்கள் காந்தனையே நம்பியிருப்பதாகவும் எழுதியிருந்ததை படித்து வருந்தினான். பின்பு அவன் தனது மாமாவிடம் சென்று "மாமா கனடாவிற்கு வந்த சில நாட்களில் துஷ்டர்களோடு தெரியாத்தனமாகக் கூடித்திரிந்துவிட்டேன். எனது நண்பர்களில் ஒருவன் திருந்தி எங்களில் இருந்து விலகிவிட்டான். அதனால் மற்றவர்கள் அவனை காயப்படுத்திவிட்டார்கள். எனக்கும் ஒருநாள் இது நடக்கலாம் என எண்ணி என்னை மாற்றிக் கொள்ளப் பயப்படுகிறேன்" என்று கூறினான். காந்தா உன்னைத் திருத்துவதற்காக நாங்கள் இந்த ஊரிலிருந்து வேறு ஊருக்கு போவதாக முடிவு செய்திருந் தோம். ஆனால் பிறகு யோசித்தோம், நீயாக உணர்ந்து திருந்தாவிட்டால் நீ எந்த ஊருக்குப் போனாலும் மாறமாட்டாய் என எண்ணி எங்கள் முடிவை மாற்றிக் கொண்டோம். ஆனால் இப்போ நீ உன் பிழையை உணர்ந்து திருந்தி விட்டாய். எனவே நாம் வேறு ஊருக்குப் போவோம் என்று கூறி அவர்கள் புறப்பட்டார்கள். அங்கு காந்தன் மிக ஊக்கத்துடனும், தனது பெற்றோரின் கனவுகளை நனவாக்கும் லட்சியத்துடனும் படித்தான்.

எவரும் தானாக உணர்ந்து திருந்தாவிட்டால் அவர்களை யாராலும் திருத்த முடியாது.

**பா. ஹரிகரன்**

**சிறுவர் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை நற்சித்திரம் — சிறுவர் பூங்கா

# எனது கனடா வாழ்நாளின் அனுபவம்

எனது பெயர் தீபன் சிவானந்தராஜா. நான் கனடாவிற்கு 1995 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 6 ஆம் திகதி தந்தையின் ஸ்பொன்ஸர் உதவியால் எனது தாயாருடனும் சகோதரியுடனும் வந்தேன். நான் கனடாவில் உள்ள ரொறன்ரோ நகரத்தில் வசிக்கிறேன். நான் எனது வீட்டின் அண்மையில் உள்ள வின்செஸ்ரர் பொதுப் பாடசாலையில் எட்டாம் வகுப்பில் கற்கிறேன். நான் கனடாவிற்கு வந்து இரண்டு நாட்களில் பாடசாலையில் சேர்ந்தேன். பாடசாலை அதிபர் என்னை ஒரு வகுப்பில் விட்டார். எல்லோரும் என்னை வியப்பாகப் பார்த்து ஆங்கிலத்தில் பல வினாக்களைக் கேட்டார்கள். அந்த வகுப்பறையில் இருந்த ஒரு தமிழ் மாணவன் கூட என்னை ஆங்கிலத்தில் கேலியாக கேள்விகள் கேட்டார். ஆனால் எனக்கு அதற்கு ஆங்கிலத்தில் பதில் அளிக்க முடியவில்லை. ஏனென்றால் அப்போது எனக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியாது. பின்னர் நான் பாடசாலை விட்டு வீடு செல்லும் போது அந்த தமிழ் மாணவர் கூட தமிழனுடன் தமிழில் பேச தயங்குகிறாரே வேறு யாருடன் தமிழில் கதைப்பார் என்று நினைத்தேன்.

வீட்டிற்குச் சென்று பாடசாலையில் நடந்தவற்றை எனது தாய் தந்தையிடம் விளக்கமாகக் கூறினேன். எனது தந்தை "நீயும் ஆங்கிலம் பேசப் பழகினால் இவ்வாறு தான் தமிழரைக் கண்டால் ஆங்கிலத்தில் உரையாடுவாய்" என்று கூறினார். இவ்வாறு பல மாதங்கள் உருண்டோடியது. இப்போது எனக்கு ஆங்கிலம் சரளமாக பேச முடிகிறது. சேவாச்சிரமம் நடத்திய ஸ்ரீ இராமகிருஷ்ணர் பேச்சுப் போட்டியில் நான் பங்கு பற்றி பரிசு பெற்றேன். மேலும் நான் வானொலியில் சிறுவர் நிகழ்ச்சியில் பங்குபற்றினேன் எமது பாடசாலையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் சுவாமி விவேகானந்தர் சிக்காகோ சர்வ மாநாட்டில் ஆற்றிய உரையை தமிழில் நிகழ்த்தினேன் இதுவே எனது ஒருவருட கனடாவில் வாழ்ந்த அனுபவம் ஆகும்.



நான் முன்னேறுவதற்கு எனது பெற்றோரும் ஆசிரியர்களும் மிகவும் உதவி புரிகிறார்கள்.

*****

## அட்டைப்படம்

பெப்ரவரி மாதம் 23ந்திகதி செவ்வாய்க்கிழமை வின்செவஸ்ரெர் பொதுப் பாடசாலை (ரொறன்ரோ கல்விச்சபை) தமிழ் மாணவ மன்றம் வழங்கிய முத்தமிழ் விழாவின் போது மாணவர்கள் கனடா தேசிய கீதம், தமிழ்த்தாய் வணக்கம் பாடிக்கொண்டிருக்கும் நிகழ்ச்சியில் ஒரு பகுதி.

இவ்விழாவில் தமிழீழக் குழந்தைகளுக்கு மாணவர்கள் பணம் சேர்த்து அனுப்பி வைத்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்த ரோஜா..... - பேசும் ஆசிரியரின் பேனா!......

## இதயராகம்

தமிழீழத்தில், ஸ்ரீலங்கா இனவெறி அரசின் இராணுவ ஆக்கிரமிப்பு தற்காலிக பின்னடைவாக இருந்தாலும் தன்மானமுள்ள தமிழ் மக்கள் படும் வேதனைகளை எண்ணிப் பார்க்கும்போது எமது இதயராகம் சோகமானதுதான்.

ஆனாலும் எம்மக்களின் சிந்தனை அற்ற கதைகளும், நடைமுறைகளும் பெரும் வேதனையைத் தருகின்றன. ஸ்ரீலங்கா இனவெறி அரசின், தனக்கு ஆதரவான செய்தி வீடியோப் பிரதிகளை, வியாபார நோக்க திற்காக எமது மக்களே காவிச்செல்வது மனவருத்தத்திற்குறியது. சில கேள்விகளை நாமே எம்மைகேட்டு பதிலை அறிந்து கொள்ளவேண்டும். குறிப்பாக எமது தமிழீழப் படை தமக்கும், தமிழ் மக்களுக்கும் பெரிய அழிவுகளை ஏற்படுத்தாது ஏன் பின்வாங்கினர்? எமது தமிழீழப் படை யின் பலத்தை பலப்படுத்தவேண்டியது யாரின் கடமை? இனவெறி சிங்கள அரசு தான் ஆக்கிரமித்த பகுதிகளில், தான் தமிழ் மக்களின் நண்பனாக தொலைக்காட்சிகளிலும் வெளிநாட்டு வெகுஜனத்தொடர்பு சாதனங்களிலும் தம்மைக் காட்டிக்கொள்வது எதற்காக? அன்று இந்திய இராணுவம் எமது நண்பனாக நாடகமாடி, எம்மக்களையையே வேட்டையாடிய கதைகளை மறந்துவிட்டோமா? இப்படியே கேள்விகளை கேட்டுக்கொண்டே போகலாம். இன்றைய தேவைகளை உணர்ந்து செயல்பட வேண்டியவர்கள் நாங்களே!
விடுதலை உணர்வு திணிக்கப்படக்கூடாது.

"புலி பதுங்குவது பாய்வதற்கே...!"

வி. எல். ஆனந்த்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா இலக்கிய மாத மலர்

# ரோஜா

இதழ்: 13

மே 15, 96 - ஜுன் 14, 96

பிரதம ஆசிரியர்:
**வி.எல். ஆனந்த்.**

உதவி ஆசிரியர்கள்:
**அனுசியா ஆனந்த்.**
**எஸ். ராஜ்மோகன்.**

சிறப்பாசிரியர்:
**கலைவாணி ராஜகுமாரன்**

பிரசுரம்/விளம்பரம்/வடிவமைப்பு/
அச்சமைப்பு/அச்சடிப்பு:
**எல். கிரிஷோத் டைப்செட்டிங்**

விநியோகம்/விளம்பர உதவி:
**ஜேசு**

அட்டை வடிவமைப்பு:
**சசி - கரன் கிராப்**

படப்பிடிப்பு/ஓவியம்:
**கருணா - கிரியேட்டிவ் போட்டோ**


## வாசகரின் பேனா...

அன்புடன் ஆசிரியருக்கு,

நான் தங்கள் 'ரோஜா' சஞ்சிகையைத் தவறாமல் பார்த்து வருகிறேன். ஒவ்வொரு இதழ்களிலும் புதிய விடயங்களும், தரமான ஆக்கங்களின் நிறைவு கண்டு பாராட்ட வேண்டும் என்பதனாலேயே முதன்முதலாக இக் கடிதத்தை எழுதுகின்றேன்.

இவ்வாண்டு மாதமாதம் "ரோஜா' சஞ்சிகையைப் பார்ப்பதுகண்டு மகிழ்ச்சி.

தம்பி கலாதரன் நன்றாக தனது கடமையைச் செய்திருக்கின்றார். "இலக்கியச் சந்திப்பு' மிக நல்லவிடயங்களை எடுத்துக் காட்டியது. இவருக்கும் எனது பாராட்டு.

ஈழத்தமிழர்கள் மத்தியிலே இப்படியொரு சஞ்சிகை வளர வாசகர்கள் ஆதரவுதான் நிச்சயம் தேவை. அதனை எப்பவும் நான் தருவேன்.

நவீன ஓவியம் வரையும் கருணா அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்! ஆரம்பத்தில் இவரின் ஓவியத்தைப் புரிந்து கொள்வது கடினமாக இருந்தாலும் அதன் நுணுக்கத்தை கண்டுகொண்டால் இவரின் திறமை விளங்கிவிடும்.

ரோஜாவுக்கு எனது வாழ்த்துக்கள்!

இப்படிக்கு,
உண்மையுள்ள
வி. நகுலன் (மார்க்கம்)


**ஆக்கங்கள் விளம்பரங்கள்**

தொலைபேசி: (416) 425 2884, தொலைநகல்: (416) 425 2625

**"ROJAH"**

F.P.P.O., P.O.BOX 45593, 747 DON MILLS RD,
DON MILLS, ON. CANADA, M3C 3S4.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவும் நடக்கலாம்!

அப்புத்துரையும், ஐயாத்துரையும் mall ஒன்றில் சந்தித்துக் கொண்டனர். இருவரும் நெருங்கிய *friends*. *Bell Canada* மட்டும் உள்ளூர் சேவைக்கு காசு வசூலித்திருந்தால் இவர்கள் இரண்டு பேரும்தான் கூடக் காசு கட்ட வேண்டியிருக்கும். அவை நேரிலை சந்திச்சா கேட்கவா வேணும்.

"ஐயாத்துரை எப்படியடாப்பா இருக்கிறாய்?" அப்புத்துரை தொடங்கினார். 'இருக்கிறன் என்ன விசேஷம்?" ஐயாத்துரையின் பதிலுக்கு அப்புத்துரை அவசரமில்லாமல் தொடர்ந்தார்.

"ஒண்டுமாய் விளங்கேல்லையப்பா! அண்டைக்கு உப்பிடி றோட்டாலை நடந்து வந்தனான். அங்காலை போவமெண்டு ஒரு இடத்திலை றோட்டை கடந்தன். இரண்டு பக்கமும் வந்த வாகனமெல்லாம் டக்கு டக்கு எண்டு நிண்டிச்சு! அட! என்னைப் பற்றி இஞ்ச கூடத் தெரிஞ்சிருக்கு எண்டு சந்தோஷமாய்ப் போச்சு! பிறகு அங்காலை போய் நிண்ட தமிழ் "பொடிட்டை ஏண்டாப்பா உதிலை எல்லாம் நிண்டது நான் கடக்கேக்க" எண்டன். அவன் சொன்னான் "அது பெரியவர் இது குறொஸ் வோக்கிங்" எண்டு "இது எனக்குத் தெரியாதே" எண்டு போட்டு பிறகொருக்கா வேறயிடத்திலை உப்பிடித்தான் கடப்பம் எண்டு இறங்கினன் ஸ்பீடாய் வந்த கார்க்காரன் கிட்ட வந்தவுடனே கிரீச் எண்டு பிறேக்பிடிச்சு நிற்பாட்டிட்டு ஏதோ கத்துறான். எனக்கெண்டா ஒண்டுமாய் விளங்கேல்லை. குறுக்காலே போனா 'குறெஸ் வாக்கிங் தானே' ஏன் கத்தினவனோ தெரியேல்லை. அதுசரி ஐயாத்துரை இதுகள் ஏன் இஞ்ச பிழையான வழியாலை ஓடித் திரியிறாங்கள்

"இஞ்சை எல்லாம் மாறித்தான் செய்யிறாங்கள்" "அப்ப இவங்கள் சாப்பிடுறது மூக்காலையோ இல்லை..." என இழுத்த அப்புத்துரை "இஞ்சை ஐயாத்துரை நாளண்டைக்கு உங்க ஒரு பாட்டுப் புறோகிறாம் இருக்காம் வாறியே" எங்கை என ஐயாத்துரை கேட்க 'போவன்'என பதிலளித்த அப்புத்துரையைப் பார்த்து நீ போவன் ஆனா எங்கையெண்டு சொல்லு" என கூற, ஆத்திரமடைந்த அப்புத்துரை "என்ன விளையாடுறியே! 'போவன் பள்ளிக்கூடத்திலை'தான் நடக்குது"

என்றார். சிரித்த ஐயாத்துரை "என்ன போவன் வருவன் எண்டுறாய் அது வோர்பன்" எண்டு சொல்ல "நாசம் கட்டின பேர் வைச்சிருக்கிறாங்கள். நல்லதாய் லட்சுமி வித்தியாலயம், சுப்பிரமணியர் பாடசாலை எண்டு வைக்கிறதை விட்டிட்டு.... இதுகளை திருத்தேலாது! எண்டவர் "ஐயாத்துரை வெள்ளைச் சுருட்டு எங்கே வேண்டலாம்?"
"என்ன வெள்ளைச்சுருட்டோ?"
"ஓமடாப்பா அதுதான் சீக்கிரட்டு வீட்டிலை சுருட்டு பத்தி பெரிய பிரச்சனை. மகன் சொல்லிப்போட்டான் அப்பா, ஒண்டில் சுருட்டு வெளியிலை போகவேணும் இல்லை நீங்கள் போகவேணும். பார்த்தன் சீக்கிரட்டு எண்டா பிரச்சனையில்லை. உது சுருட்டு முழுசாய் பத்தவும் ஏலாது. பாதியை கொண்டுபோய் அங்கினை செருகி வைச்சா மணக்குதாம் அதுதான் சீக்கிரட்டு வேண்டுவமெண்டு"

செய்தி: E.S.L எனப்படும்- இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்பதற்கு ஏராள-மான முதியவர்கள் சேர்கிறார்கள்.

~ கலாதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைவாணி ராஜகுமாரன்




அன்பார்ந்த வாசக நெஞ்சங்களுக்கு.... வணக்கம்!

சில பத்திரிகைகளிலும் வானொலி நிகழ்சிகளிலும் அறியப் பட்ட எனது பெயர் முதன்முதலாக சஞ்சிகை ஒன்றில் அச்சேறுகின்றது. இந்த இனிய வாய்ப்பைத் தந்த 'ரோஜா' சஞ்சிகையின் ஆசிரியர் வி. எல். ஆனந்த் அவர்களுக்கு எனது நன்றிகள் பல.....

எந்த ஒரு கலையும் மக்களைச் சென்றடையாதவரை அதற்கு பெருமையில்லை. அந்த வகையில் எழுத்து என்பதும் மக்களைச் சென்றடைவதாக, மக்களைப் பிரதிபலிப்பதாக, வாழும் காலத்தின் தேவையறிந்து எழுதப்படுவதாக, அதனை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக... ஓர் உயரிய நோக்கோடு அமைதல் வேண்டும். இந்த உண்மையை நான் உணர்வதற்கு வெகுகாலம் பிடித்தது. அந்த குறிக்கோளற்ற பயணத்தில் என் கால்கள் பதிந்த இடங்களில் காதலும், அழகுணர்ச்சியும், இயற்கை பற்றியதான வியப்பும் பொய்யான அழுகைகளும் பரவிக் கிடந்தன. என் கதைகளும் கவிதைகளும் பொய்யான தொரு மாயையில் அழுந்திக் கிடந்திருப்பதாகவே எனக்கு இப்போது தோன்றுகிறது.

ஆனால் சமீபத்தில் ஒருவர் என்னிடம் கேட்ட கேள்வி என் எழுத்துக்களின் போக்கை மாற்றியது. "இன்னமும் நீங்கள் பூக்களைப் பற்றித்தானா எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்கிற ரீதியான அந்தக் கேள்வியில் இருந்த நியாயம் தீயாய் என்னைச் சுட்டது. எம் தேசத்தில் துடிதுடிக்க பதை-பதைக்க உயிர்கள் கொன்றொழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், ஊரைத் துறந்து உடமைகளை விட்டு, பழக்க மற்ற வீதிகளில் மக்கள் படுத்துறங்கும் வேளையில் பசி... பசி.... பசி என்று எம் இனத்தின் குழந்தைகள் கதறியழும் வேளையில்...... நான் இன்னமும் காதலைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கின்றேனே என்கிற குற்றவுணர்வு என்னைச் சித்திரவதை செய்தது. அந்த வலியின் உறுத்தலில் பிரசவமான என் எழுத்துக்கள் விடுதலைக்கு விரல் அசைப்பதாய் அமை வதைக் காண்கிறேன். துப்பாக்கி தூக்கி முன்னணியில் நிற்க முடியாமல் அல்லற்படுகிற எம் மக்களின் கண்ணீர் துடைக்க கரம் நீட்டாமல் கோழைகளாய் சுயநலமிகளாய், சொந்த சுகம் தேடி வந்து விட்டோம். இங்கிருந்துகொண்டு விடுதலை வேள்வியில் ஒரு பொறியாய் இலட்சோப இலட்சம் குரல் களிடை ஒரு குரலாய், காலசைத்து முன்னேறும் படையில் ஒரு சிறு துளியாய்..... என்னால் பங்கெடுக்க முடிந்தால்..... என் உள்ளார்ந்த உறுத்தல், மனவதை ஓரளவு நீங்கும். இனிவரும் என் எழுத்துக்கள் அவற்றைப் பிரதிபலிப்பனவாக அமையும்.

இந்த மலரின் என் பக்கங்கள், மண்ணுக்காய் மரணித்த மாவீரரின் பொற்கமலப்பாதங்களுக்கு சமர்ப்பணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதாரணம் மாறுகிறது

"நாயைப்போல் சுட்டார்கள்
என்று
இனி உதாரணம் காட்டாதீர்கள்!"
முற்றத்தில் நின்று
முனகியது நாய்...!
பக்கத்தில்.....
தமிழனின் பிணம்....!



## அரசின் கருணை

பிரித்துத் தரும்படி கேட்டோம்!
எங்களை
ஒன்றாக்கினார்கள்;
அகதி முகாம்களில்!

## சமாதானம்

வெள்ளைப்புறா...
தூது வந்தது
அலகில் கத்தியோடு!

## எழுத்தில் மட்டும்

'அம்மா' என்ற தலைப்பில்
எழுதிய கவிதைக்கு
முதற்பரிசு!
தொலைபேசியில்
அழைத்துக் களைத்தாள்
அன்னை!

## புலம் பெயர்ந்த பொட்டு

பொட்டில்லை!
பூவில்லை!
ஆனாலும்
விதவை இல்லை!
புலம்பெயர்ந்த மங்கை!

## தேர்தலின்பின்

வாக்குகள்
வழங்கும்படி
வேட்டி கொடுத்தார்கள்!
தேர்தலின் பின்...
பறிபோனது
கோவணம்!

## கலப்படம்

சத்துணவு விளம்பரத்தில்
சிரித்த குழந்தை
மறுநாள்....
இறந்து கிடந்தது!
சத்துணவில் கலப்படமாம்!

## பாதை

வருகைக்காய் காத்திருந்து
பாதங்கள் படாமல்
மெலிந்து போனது
பாதை!

~ வாணி ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணைத்துள் வாழும் மனிதர்கள்

கலைவாணி ராஜகுமாரன்

"பிள்ளை! எழும்பி வா...!
மழைவரப் போகுது"
அம்மாவின் குரல் இத்தோடு மூன்றாவது தடவையாக என்னை அழைத்து விட்டது.

நான் அந்தக் கணத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தேன். மழைத்துளி மண்ணில் விழுந்து கலந்து எழுகிற வாசனைக்காக, அந்த சுகானுபவத்திற்காக என் நாசிகள் ஏங்கிக் கொண்டிருந்தன. என்னோடு கூட தர்ஷியும் அந்தப் பள்ளிக்கூடப் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அந்த அகதி முகாமிற்கு வந்து சேர்ந்தவர்களில் தர்ஷியின் குடும்பமும் ஒன்று. எல்லோரையும் போல வீடு வாசலைத் துறந்து ஓடி வந்திருந்தனர் அந்தப் பரிதாபத்திற்குரியவர்கள்.

"சும்மா இருட்டி இருக்குது. மழை வராது உள்ளுக்குப்போவம் அருணாக்கா...! தர்ஷி என் கைகளைப் பற்றினாள்.
"கொஞ்சம் பொறு வாறன்...!
மழை வரும் என்று எனக்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தது. மரங்களின் இலைகள் அசைவை நிறுத்தி விட்டு மௌனத்தவத்தில் ஆழ்ந்திருந்தன. வானம் இருண்டிருந்தது.

தூரத்தில் மழையின் இரைச்சல் கேட்டது. மெல்ல மெல்ல நெருங்குவதை செவி மடுத்த மறுகணம் சடசடவென கனத்த துளிகள் பூமியில் இறங்கின. நான் மூச்சை உள்ளிழுத்து அந்த மண்ணின் மணத்தை அனுபவித்தேன்.

ஆ....! என்ன வாசனை... இந்த மண்ணின் வாசமும் மல்லிகை வாசமும் என்னை எப்போதும் கிறங்க வைப்பவை. சிறுவயதில் கூட குழத்தடியில் போய்த் தண்ணீர் வார்த்துவரும்படி அம்மா சொன்னால்... வேண்டுமென்றே குடத்தை சரித்து புழுதி மண்ணும் நீரும் கலந்து எழும் மணத்தில் மனதைப் பறிகொடுத்து நின்றதுண்டு.

"தடிமன் பிடிக்கப் போகுது. ஏதேன் வருத்தம் வந்தால்... தர இங்கை என்ன மருந்து இருக்குதே... மழைக்குள்ளை நனைஞ்சது போதும் வா பிள்ளை...!"
அம்மா பொறுமையிழந்து கத்தினா.

"அம்மா...! இன்னும் எத்தனை நாளைக்கு என்னை சிறகுகளுக்குள் பொத்திப் பொத்தி வளர்க்கப் போகிறீர்கள். அதிகபட்சம் இன்னும் ஆறு மாதங்களில் உங்களை விட்டு வெகுதூரம் போய்விடப் போகிறேனே...!" அங்கு அண்ணா எனக்காகப் பார்த்திருக்கும் அந்த முகம் தெரியாதவரோடு என் வாழ்வை இணைத்துக் கொள்ளும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று வேதனையோடு நினைத்துக் கொண்டே உள்ளே வந்தேன்.

அந்த அகதி முகாமில் நிதானமாக அடியெடுத்து வைத்து வழி செய்து கொண்டு போகா விட்டால் உட்கார்ந்து கொண்டும் படுத்துக் கொண்டும் இருக்கும் மனிதர்கள் மேல்விழ நேரிட்டு விடும். எப்போதும் அங்கு யாராவது உச்சஸ்தாயியில் குரலெடுத்துப் பேசிக் கொண்டே இருப்பதானால் ஒரே இரைச்சலாக இருக்கும்.
அங்கு சொந்த மண்ணைத் துறந்த சோகம் இருந்தது. உறவுகளைப் பறிகொடுத்த ஓலம் இருந்தது. உடமைகளை இழந்து போன ஏக்கம் இருந்தது. என்று ஊர் இரும்புவோம் எனும் எதிர்பார்ப்பு இருந்தது.

அவற்றை விட நோயும் பசியும் விரக்தியும் வேதனையும் அங்கு உண்டு. அத்தனை ஆண்கள் மத்தியில் சேலை திரை மறைவில் பிரசவம் நிகழ்ந்ததுண்டு. கைகால் குச்சியாக, எலும்புகள் துரத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க, வயிறு முன் தள்ளி போஷாக்கின்மையைப் பறைசாற்ற ஆடையில்லாத அம்மணக் குழந்தைகள் நிறைய இருந்தன.

எண்ணும் போதெல்லாம் என் இதயத்தை இரும்புக்கரங்களால் யாரோ பிசைவதைப் போன்ற வேதனையில் துடித்துப் போகிறேன். இவர்களை, துன்பத்திலே உழன்று கொண்டிருக்கிற என் சொந்த மனிதர்களை விட்டு விட்டு வாழ்வைத்தேடி நான் போவது சுயநலமில்லையா என்ற குற்றவுணர்வு என்னைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்கிறது. ஆனால்... பல காலமாகச் சிரிப்பை மறந்திருந்த என் தாயின் முகத்தில் சில நாட்களாகத் தாண்டவமாடும் மகிழ்ச்சிக் களையை அழிக்க நான் விரும்பவில்லை அண்ணா என் தயக்கத்தை அறிந்தபோது... ஒரே கத்தலில் என்னைச் சம்மதிக்க வைத்தார்.



"நான் எவ்வளவு கஷ்டப்பட்டு இந்தக் கலியாணத்தை ஒழுங்கு செய்தனான். பெடியன் "ஸ்பொன்சர்" வேறு செய்து போட்டுது. நீ இப்ப வரமாட்டனென்றால்....எனக்குத்தான் மரியாதையில்லை. "உன்னால உடனை வெளிக்கிடை ஏலாதெண்டா ரெண்டு மூண்டு மாசம் உங்கை நிண்டிட்டு அப்பா அம்மாவோடை வவுனியாவுக்கு வந்து சேர்....! அங்கை நிண்டு கொண்டு பயண அலுவலைப் பார்க்கலாம். கொழும்பில் இப்ப நிக்கிறது பயம்!" என்றார் அண்ணா.

"எப்ப பிள்ளை போய்....?" சுவரில் சாய்ந்தபடி சுருட்டொன்றை இழுத்துக் கொண்டிருந்த ராசலிங்கம் மாமாவின் குரல் என் உள்மன அழுகையில் குறுக்கிட்டது.

"ஆறு மாசத்துக்குள்ளை எல்லாம் சரி வந்திடும். இப்பதானே "ஸ்பொன்சர்" பண்ணினவர்"

"என்னவோ பிள்ளை.... வாழ வேண்டிய வயதிலை எத்தனை இளம்பிள்ளையளை பறிகொடுத்துப்போட்டிருக்கிறம். நீயாவது அங்கை போய் சந்தோஷமா இரு....!"

அவரின் குரலில் இழையோடிய சோகம் அவர் தனது மகனின் இழப்பை நினைவுபடுத்திக் கொண்டதை வெளிப்படுத்தியது.

"ராசலிங்கத்தாரின் மகன் மனோவை யாராலும் மறக்க முடியாது. பணச் செருக்கும், சாதித் திமிரும் ஆணவமும் படைத்த ராசலிங்கத்திற்கு எதிர்மாறான குணம் கொண்டவன் மனோகரன். அவர்கள் வீட்டிற்கு நான் போகும் போதெல்லாம் ஏதாவது புத்தகத்தினுள் மூழ்கிப்போயிருப்பான். அநேகமாக அவை விடுதலையைப் பற்றியதான வெளியீடாக இருக்கும். அவர்கள் வீட்டு முன்னறையைக் கடந்து உள்ளே அவன் தங்கையைத் தேடிப்போகும்போது புத்தகத்திலிருந்து விழியைப் பெயர்ந்து என்னை ஏறிட்டு நோக்குவான். பல நாட்களாக அந்தப் பார்வையின் அர்த்தம் புரிபடாமலே இருந்தது. ஒருநாள் நான் அவர்கள் வீட்டிற்குப் போகும் வழியில் என்னை இடைமறித்துத் தன் காதலை வெளிப்படுத்திய போது... நான் பதிலளிக்காமலே நகர்ந்து விட்டேன். அதன்பிறகு என் விழிகளிலும் கள்ளம் புகுந்தது. ஆனால்... அந்தப் பார்வை நாடகத்திற்கும் ராசலிங்கத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றுப்புள்ளி வைத்தார். அவர்கள் வீட்டிற்கு வேலி அடைக்கப்போன என் தந்தையிடம் எகிறிப் பாய்ந்தார்.

"இஞ்சார் செல்லத்துரை! ஏதோ என்ரை பெட்டையோடை சிநேகிதம் எண்டு சொல்லிக் கொண்டு உன்ரை மோள் வந்து போறாள். சரி வந்திட்டுப் போகட்டன் எண்டு இவ்வளவு நாளும் விட்டன். ஆனா.... இப்பதான் விளங்குது நீ உன்ரை குமரியை இங்கை அனுப்பி என்ரை பெடியனை மருமோனாக்கப் பாக்கிறாய் எண்டு உந்த எண்ணத்தை வைச்சுக் கொண்டு அவளை இஞ்சை அனுப்பாதை கண்டியோ.....!"

அவர் எறிந்த பந்து எங்கள் வீட்டுச் சுவரில் வந்து மோதிற்று. என் தந்தை ஏழையானாலும் ரோஷமுள்ளவர். அவர் அன்று போட்ட கூச்சலில் நான் அவர்களுடைய வீட்டிற்குப் போவதை நிறுத்திக் கொண்டேன்.

"அவன் ராசலிங்கம் வீட்டிலை உனக்கென்ன வேலை... உன்ரை குமரியை விட்டு மாப்பிளை பிடிக்கப் பாக்கிறியோ எண்டுபழி சொல்லுறான். பிள்ளை....! நான் அவன்ரை வீட்டிலை விறகு கொத்தலாம், வேலி அடைக்கலாம், தோட்டத்திலை வேலை செய்யலாம். அது வெட்கமில்லை. ஆனா... ஆனா... அவன் சொல்லுறது மாதிரி நடந்தா.. எனக்கு பூச்சிக்கு அடிக்கிற மருந்துதான் கதி....! ஒரு போத்திலோடை இந்த வெக்கக்கேடுகளைப் பாக்காமல் போய்ச் சேர்ந்திடுவன்".

என் தந்தை ஒருநாளும் அழுது நான் பார்த்ததில்லை; அன்று அழுதார். அந்தக் கண்ணீரோடு என் காதலையும் துடைத்தெறிந்தேன். மனோவைக் காணும் போதெல்லாம் தலையைக் குனிந்து கொண்டு நகர்ந்து விடுவேன். வழக்கம் போல மனோவும் சவரம் செய்யப்படாத முகமும் கலைந்த தலையுமாக சிலகாலம் அலைந்தான். பின்பொருநாள் திடீரென காணாமற் போனான். அவன் மீண்டும் ஊருக்குத் திரும்பி வந்தபோது அவன் தோற்றமே மாறியிருந்தது. சீருடையும் துப்பாக்கியும் நிமிர்ந்த தோள்களுமாய் வெகு கம்பீரமாக இருந்தான். அவன் என்னைப் பார்த்த பார்வையில் கள்ளம் இருக்கவில்லை. பரிசுத்தமான நிர்மலமான அந்தக் கண்கள் எல்லோரையும் போலத்தான் என்னையும் ஏறிட்டு நோக்கியது. அன்றிரவு என் தலையணை கண்ணீரால் நனைத்தது.

"மனோ...! உன்னை நான் அநியாயமாக இழந்து விட்டேனே...!

நாட்கள் நகர்ந்தன. மனோவை நாங்கள் நிரந்தரமாக இழந்தோம். குண்டுச் சத்தங்களோடு விடிந்த ஒரு பொழுதில் அவன் இறந்து போன செய்தி வந்தது. மதில்களில் ஒட்டப்பட்ட அஞ்சலியில் அவன் வெகு நாட்களாக சிரித்துக் கொண்டிருந்தான். நாளடைவில் புதிய சுவரொட்டிகளின் பின்னே அவன் முகம் மறைந்தது. அவன் தியாகம் ஊரார் நெஞ்சங்களில் உறைந்தது. எங்கள் வீட்டிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. வீட்டை விற்று அண்ணா வெளிநாட்டிற்குப் போனார். ராசலிங்கத்தாரின் மேலாண்மை இருள் எங்கள் வீட்டிலிருந்து மெல்ல மெல்ல விலகியது. பொறுக்க மாட்டாதவராய் எங்கள் குடிசையின் முன் வந்து நின்று கத்தினார்.

"குடிகேடியள்..! கரையானுக்கு வீட்டை வித்துப் போட்டு இரவல் கோடியில் குந்தியிருக்குதுகள். அண்டை அயலில் பெண் புரசுகள் இருக்கிறேல்லையே....!" அன்று முதன் முதலாக நான் என் எதிர்ப்பைக் காட்டினேன்.

"நல்ல சாதி எது...? மனுஷனா மனுஷத்தன்மையோடை நடந்து கொள்ளுற எல்லோரும் நல்ல சாதிதான்! மனுஷசாதிதான்! அந்த வகையில் எங்கடை வீட்டை வாங்கினவர் உங்களை விட நல்ல சாதி ராசலிங்கத்தார்....!

இன்று... காசுக்கர்வமும் சாதித்திமிரும், வீடும் வளவும் , வட்டி வரவும் இழந்து சாய்ந்திருக்கும் தூணே கதியாய் ராசலிங்கத்தார். இன்னமும் சிறிது நேரத்தில் வழங்கப்படும் உணவிற்காக எல்லோருடனும் கூடவே வரிசையில் நிற்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறவர். அந்த உணவு எவர் கையால் வழங்கப்பட்டாலும் வாங்கக் காத்திருக்கிறவர். இவரிடத்தில் இப்போது எனக்குக் கோபம் இல்லை. பரிதாபமும் இல்லை.

போர் என்பது கொடுமையானது; உண்மைதான்! இழப்புகள் உயிர் துடிக்க வைப்பவை; மறுப்பதற்கில்லை! ஆனால்... ஒருவகையில் அது பாடம். கன்னத்தில் அடித்து உண்மையை உணர்த்தி விட்டது காலம். பெரும் வெள்ளம் சுழித்தோடி மேடு பள்ளமெல்லாம் கரைத்து சமநிலமாக்கி விட்டாற்போல எல்லா மக்களையும் யுத்தம் ஓரிடத்திலே கொண்டு வந்து ஒதுக்கி விட்டது.

"என் வீடு பெரிசு...! உன்னுடையது பொத்தல் குடிசை!
"நான் ஐம்பது பரப்புக்கு அதிபதி உனக்கு இரவல் கோடி...!
"என்னிடம் நூறு பவுண் நகை...! உன் காதில் கூட பொட்டுத் தங்கம் இல்லை...!

என்பதான பேச்சுக்கள் இனி யோசித்தே பேசப்படும். இனி வார்த்தைகள் ஒவ்வொன்றும் உதிர்க்கப்படுவதன் முன் பத்துத்தடவையேனும் சரிபார்க்கப்படும்.

என் நினைவுகளுக்குக் கடிவாளமிட்டது அப்பாவின் குரல்.
"பிள்ளை அருணா..! எங்கையெண்டு உன்னைத் தேடுறது. உனக்கு 'இன்ரவியூவுக்கு' 'எம்பசி'யிலை இருந்து கடிதம் வந்திருக்காம். கொழும்பிலை இருந்து கொண்ணன்ரை சிநேகிதப் பெடியன் குடுத்தனுப்பியிருக்கு...!" அப்பா மகிழ்ச்சிப் பரபரப்போடு பேசினார்.

"அம்மாளாச்சியே எண்டு கெதியா வந்திட்டுது. இவளை இங்கை வைச்சுக் கொண்டு மடியில் நெருப்பைக் கட்டின மாதிரி பதைச்சுக் கொண்டிருந்தன். அப்ப வவுனியாவுக்குப் போக பாசுக்கு ஒழுங்கு பண்ணுங்கோவனப்பா...!" அம்மா பரபரத்தாள். பின் எல்லோருக்கும் அதைத் தெரிவித்துவிடவென்று போனாள்.

என் கையை யாரோ பற்றுவதறிந்து திரும்பினேன். தர்ஷி நின்றிருந்தாள்.

"அப்ப நீங்கள் கெதியா போயிடுவீங்கள் என்னக்கா...! ஏக்கத்தோடு அவள் வினவினாள்.

"பாஸ் எடுக்க வேணுந்தானே... போக எப்பிடியும் ஒரு மாதமாகும்" என்றேன்.

"நீங்கள் அங்கை போய் எங்களையெல்லாம் மறந்து போயிடுவீங்களா அருணா அக்கா....!" தர்ஷியின் குரல் தழுதழுத்தது. என் கைகளைப் பற்றியிருந்த விரல்கள் இறுகின.

"இல்லையம்மா...!" என் விழியோரங்களில் கண்ணீர்த்துளி விழுந்து விடத் துடித்தது.

அவள் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பின் ஏக்கம் தொனிக்கும் கண்களோடு சொன்னாள்.

"எனக்கும் ஒரு அண்ணா வெளிநாட்டிலை இருந்திருந்தா... எவ்வளவு நல்லது!"
"ஏன் தர்ஷி...! இங்கை எங்கடை ஆக்களோடை இருக்கிறது மாதிரி வருமே...!"

"இல்லையக்கா...! ஊரிலை இருந்தவரைக்கும் சந்தோஷமாத்தான் இருந்தனான். இப்ப... இந்த அகதி முகாமிலை வந்து... கஷ்டப்படுறம். பள்ளிக்கூடமும் இல்லை. படிப்பும் இல்லை. ஒழுங்கான சாப்பாடு சாப்பிட்டு எத்தனை நாளாச்சு...! தம்பிக்கு வருத்தம். என்ன வருத்தமெண்டாலும் 'பனடோலை'த்தான் அம்மா குடுக்கிறா. இப்ப அதுவுமில்லை. இப்படியே இருந்து தம்பிக்கு ஏதாவது நடந்தா... ஏனக்கா... கடவுளிட்ட என்ன கேட்டாலும் தருவாரெண்டு அம்மம்மா சொல்லுறவ. நானும் அழுது அழுது கடவுளைக் கும்பிடுறன். ஒண்டும் நடக்கேல்லை".
அந்த பதினைந்து வயதுச் சிறுமியின் குரலில் விரக்தி கொப்பளித்தது.

"தர்ஷி...!" அவளை எப்படித் தேற்றுவதென்று எனக்குத் தெரியவில்லை.

"எனக்கு நெடுகச் சாப்பிட வேணும் போல இருக்கு அருணாக்கா...! ஆனா ஒரு நேரம் கூட வயிறு நிறையச் சாப்பிட முடியேல்லை. வெளிநாடுகளில் இருக்கிற எங்கடை ஆக்கள் கொஞ்சம் கொஞ்சம் காசு போட்டு எங்களுக்கு அனுப்பினா ஒரு நேரமாவது வடிவா சாப்பிடலாம். என்னக்கா...! அவளின் குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைஞ்சுதலோடு வெளிப்படுகிறது.

இவள் வேண்டுவது என்ன...? அதிகபட்சம் வயிறாற உணவு...! உடுக்க இன்னொரு மாற்று ஆடை...! மழைக்கும், வெய்யிலுக்கும் ஒதுங்க ஒரு கூரை..!

இவளின் அடிப்படைத் தேவைகள் கூட யுத்தத்தினால் நிராகரிக்கப்படும் போது.... உதவிக்கரம் நீட்ட வேண்டியது யார் பொறுப்பு...? வெளிநாடுகளில் வாழ்கிற சில தமிழரின் மனம் ஏனிப்படி பாலை-வனமாய் வறண்டு கிடக்கிறது..? எனக்குப் புரியத்தானில்லை.



நான் புறப்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் மளமளவென்று நடந்தேறின. நான் புறப்படும் நாளும் வந்தது. ஒவ்வொருவராக விடைபெற்ற பின் என் விழிகள் தர்ஷியைத் தேடின. என் பிரிவை எதிர்கொள்ள மாட்டாமல் எங்கேனும் போய்? ஒளிந்திருக்கிறாளோ... என்றெண்ணியபடி அவளின் தாயிடம் வினவினேன்

அந்தத் தாயின் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன. குனிந்திருந்த முகத்திலிருந்து கண்ணீர் வழிந்து நிலத்தில் விழுந்தது. பயணத்தின்போது அழக்கூடாது என்பதற்காக அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாள். ஆனால் முடியவில்லை. ஒரு பெருமூச்சோடு தர்ஷியின் தாய் சொன்னாள். "அவள் போட்டாளம்மா...!"

"எங்கை அக்கா...?" கேட்ட பின்பு தான் என் கேள்வி தவறு என்று எனக்குப் புரிந்தது. "எப்போது" என்று நான் கேட்டிருக்க வேண்டும். பயணப் பரபரப்பில் அவளை மறந்து போன நான் எப்படி வெளிநாட்டிற்குப் போய் அவளை ஞாபகத்தில் வைத்திருக்கப் போகின்றேன் என்பதை அறிந்தா அவள் அன்று என்னிடம் அந்தக் கேள்வியைக் கேட்டாள்..?

"தர்ஷி...! என்னை மன்னித்துவிடு..! நான் வாழ்வைத் தேடிப் போவதாக எண்ணிப் புறப்பட்டேன். ஆனால்.. என் வாழ்வு வேறு எங்கேயுமில்லை. இந்த மண்ணிலே, அவலம் சூழ்ந்த இந்த மக்களிடையே, மரணத்துள் வாழும் இந்த மனிதர்களிடையே இருப்பதை எனக்கு உணர்த்தினாய். ஆனால்... நான் போய்தானாக வேண்டும். வாழ்வை நோக்கியல்ல வெறுமையை நோக்கி நான் பயணப்படுகிறேன். என்னை மன்னித்துவிடு..!" நான் மானசீகமாக அந்தச் சிறுமியிடம் விடைபெறுகிறேன்.

கையில் மட்டுமல்ல; மனதிலும் சுமையோடு அந்த முகாமை விட்டு நீங்குகிறேன். வராந்தாவில் குழுமி நின்று பிரியாவிடை சொல்லிக் கையசைக்கிற ஒவ்வொரு முகங்களிலும் எதிர்காலம் பற்றியதான ஏக்கம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடக்கிறேன். மீண்டும் அங்கு ஓடிச் சென்று அவர்கள் மார்பில் சாய்ந்து விம்மி விம்மி அழ வேண்டும் போன்றதொரு உணர்வு. ஆனால்.. அவர்களுடைய உருவங்கள் மெல்ல மெல்ல கரைந்து காணாமற் போகின்றன. "எனக்குப் பசிக்குது அருணாக்கா" என்ற தர்ஷியின் குரல் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அந்தக் குரல் எனக்கு என்றுமே மறக்காது.

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் கிராமம்

~ இதயன்



நண்டுகள் கரைவந்து
நலம் விசாரித்துப் போகிற
என் கடற்கரை கிராமத்தை
குண்டுகள் விசாரித்தவேளையில்
நாங்கள் குடிபெயர்ந்தோம்.....!
பொருட்களை மட்டுமல்ல:
புதைக்கப்படாத பிணங்களையும்
வீடுகளில் விட்டு வந்தோம்....!

இதோ...!
இந்த வெண்பனி தேசத்தில்
வீசி எறியப்பட்ட நான்...!
இடம் பெயர்ந்தாலும்...
காலைக் கட்டிக் கொண்டு
அடம் பிடிக்கும் குழந்தையாய்
என்னை நகர விடாத
அந்த ஞாபகங்கள்....!
அந்த நாள் நினைவுகளில்
உயிரின் ஒரு துளி
ஒட்டியிருக்கிறது....!

இந்த விஞ்ஞான வேகத்தை
அண்ணாந்து பார்த்து
நான் அதிசயித்தாலும்....
என் இதயம் மட்டும்
அந்தச் சின்னக் கிராமத்திலே
சிறைப்பட்டுக் கிடக்கிறது

விண்வெளி ஆராய்ச்சியை
வியந்து கொண்டிருந்தாலும்...
அந்த....
குண்டு முழியுமான
புழுதித்தரையிலே
புரண்டு அழுகிறது மனசு....!

இங்கு....
இறக்குமதி செய்யப்பட்ட
இயந்திரங்களில் ஒன்றாய்
உழைத்துத் தேயும்
என் உடலின்
உதிரிப்பாகங்கள் ஒவ்வொன்றும்
ஊரின் கனவோடு
ஓய்ந்து சிலபொழுது உறங்கும்!
உறங்காத வேளைகளில்....
எங்களூர் வயல்களின்
ஈரக்காற்றுக்காய்,
எழுதிய சித்திரங்களாய்,
எழுந்து நிற்கும்
பனைமரங்களின் பார்வைக்காய்,
கரை தழுவிக் காமுறும்
அலைகளின் அழகுக்காய்,
வருஷத்திற்கொரு தரம்
வந்து போகும்
அம்மன் கோவில் ஆரவாரத்திற்காய்,
ஏங்கும் என் மனசு....!
அதட்டி உருட்டி
மூக்கின் மேல் கைவைத்து
மூலையில் அமர்த்தினாலும்....
அடங்காமல்
கைகால் உதைத்து
கண் கசக்கும்
என் மனக்குழந்தை.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது அறிவுரை அல்ல ஆலோசனை.....

புலம்பெயர்ந்து வந்து இந்த நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கும் என் அன்புச் சகோதரிகளே! உங்களோடு சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

புதிய நாடு, புதிய முகங்கள், மாறுபட்ட சூழல், காலநிலை, பழக்கவழக்கங்கள் போன்றவை உங்களைப் பிரமிப்பில் ஆழ்த்தியிருக்கும். அவற்றிற்கு இசைந் தாராய்ப்போல் திடீரென எம்மை மாற்றிக் கொண்டு விட இயலாது. இதேவேளை அவற்றின் செல்வாக்கு எம்மில் படிவதைத் தவிர்த்து விடவும் முடியாது. இவ்வாறான இரண்டும் கெட்டான் சூழ்நிலையினால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் எமது பெண்களென்றுதான் கூறவேண்டும். ஒப்பீட்டளவில் பார்க்கிற போது மற்றைய சமூகங்களைவிட வீட்டிலே இருக்கிற (வேலைக்குப் போகாமல்) பெண்களின் தொகை எமது சமூகத்திலே உயர்வாக இருப்பதைக் காணலாம். இங்கு ஆண்களின் நிலை எம்மிலிருந்து மிகவும் வேறுபட்டது. அவர்கள் வேலைக்குப் போய் அல்லது சொந்தமாகத் தொழில் தொடங்கி இந்த இயந்திர வாழ்வோடு இணைந்து விடுவார்கள். பிள்ளைகளும் அவ்வாறே ஆரம்பத்தில் மொழிப் பரிச்சய மின்மையால் சற்று சிரமப்பட்டாலும் நாளடைவில் இச்சூழலுக்குப் பழக்கப் பட்டு விடுவார்கள்.

ஆனால்... எமது நிலை...?
அதில் மாற்றங்கள் ஏற்பட நாளாகும். நாம் சட்டென்று எதையும் ஜீரணித்துக்கொள்ள, மாற்றத்திற்குட்பட விரும்பாதவர்கள். தீர்மானம் செய்வதில் தயங்குபவர்கள்.
கணவனை வேலைக்கு அனுப்பி, பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி, சமைத்து, வீடு சுத்தம் செய்து, துணி துவைத்து தொலைபேசியில் சில மணிகளைச் செலவிட்டு.... மீண்டும் வீடு திரும்பும் கணவன், பிள்ளைகளை வரவேற்று உணவு பரிமாறி, இரவு சமையல் செய்து.... இப்படியே நமது நாட்கள் கழிந்து போகின்றன. ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் சுழன்று உழன்று எமது புலன்கள் மந்தமடைந்து போவதைப் பற்றி எம்மில் எத்தனைபேர் கவனத்திற்கெடுத்துக் கொள்கின்றோம்? நல்ல குடும்பத் தலைவியாக இருப்பது ஆரோக்கியமான குடும்ப உருவாக்கத்திற்கு துணை செய்யும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அத்தோடுகூட வெளியில் என்ன நடக்கிறது என்பதிலும் நாம் சற்று கவனமெடுக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் மனைவியாக,தாயாக இருப்பதோடு சமூகப் பிரஞ்ஞையுள்ள ஒரு பெண்ணாகவும் நாம் வாழவேண்டும் என்பதனையே நான் கூற வருகின்றேன்.

**கலைவாணி ராஜகுமாரன்**

ஸ்நேகிதி...! புடவை, நகை, சினிமா, தொலைபேசி உரையாடல் இவை தவிரவும் வேறு தேவைகளும் இருப்பதை ஏன் உணரமாட்டேனென்று ஒதுங்குகிறாய்...? ஆத்மத் தேவை, அறிவுத் தேவை, சமூக செயற்பாடுகளில் விழிப்புணர்வு இவற்றை ஏன் அலட்சியம் செய்கிறாய்...? பெண்ணே...! நீ உப்பு, புளி, அரிசி, அடுப்பு என்ற எல்லைகளுக்கப்பால் எட்டிப் பார்க்கப் போகிறாய்....? அந்த அடுப்பங்கரைதான் எமது ஆஸ்தான பீடம் என்று அமர்ந்து விடலாகாது. இந்தப் பரந்த உலகில் அறிந்து கொள்ள எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. நாம் கேள்வி ஞானம், புத்தக ஞானம், அனுபவ ஞானம் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள சிறிதளவாவது முயற்சி, எடுத்துக் கொள்ள வேண்டும்.

அந்த ஏணிப் படியில் முதற்படியாக "இங்கு ஏன் வந்தோமென்றிருக்கிறது....!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அலுத்துக் கொள்வதை விட்டு "இனி என்ன செய்யலாம்..?" என்கிற தேடலில் ஈடுபட வேண்டும். அதற்கு நாம் வெளியே வரவேண்டும். பலதரப்பட்ட சமூகங்களும் வாழும் இந்த நாட்டில், எமது தேவைகளை நாமே கவனித்துக் கொள்ளுமளவிற்கேனும் ஆங்கில அறிவு அவசியம். அவற்றைப் பெற்றுக்கொள்ள இங்கு எவ்வளவோ ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவற்றிற் சேர்ந்து அடிப்படை ஆங்கில அறிவையேனும் பெற்றுக் கொள்ளுதல் அவசியம். அது மட்டுமல்ல: எம்மைச் சுற்றி என்ன நடைபெறுகிறது என்பதை அறிய முடிந்தளவு பத்திரிகை வாசிப்பதனைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். நமது பெண்களிற் பலர் ஓய்வு நேரங்களை சினிமா பார்ப்பதிலேயே கழித்து விடுகிறார்கள். சினிமா என்பது எமக்குக் கிடைத்த பொழுதுபோக்கு அம்சங்களில் முக்கியமானது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனாலும் அதில் செலவிடும் நேரம் மிக அதிகமாக இருப்பது ஆரோக்கியமானதல்ல என்பதை நாம் உணர வேண்டும். மற்றும் வானொலி கேட்பது அறிவு வளர்ச்சிக்கு உதவும். இங்கு அவ்வாறு பணி செய்யும் வானொலிச் சேவைகள் பல உள்ளன. உதாரணமாக கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், Radio Asia, கீதவாணி, போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைவிட எழுத்துத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் அதை மேலும் மெருகூட்ட எழுதலாம். மற்றும் புத்தகங்களைப் போன்ற சிறந்த நண்பர்களை நாம் மனிதர்களிடையே தேடினும் காணமுடியாது. அந்த அரியபொக்கிஷங்களைப் படித்துப் பயன்பெறலாம். மேலும் இலக்கியக் கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகளைக் காணச் செல்வது கூட தூசி படிந்து சோம்பிக் கிடக்கும் எமது புலன்களுக்கு உற்சாகமூட்டக் கூடியவையே எனலாம்.

இத்தனை வசதிகள், இத்தனை தூண்டுதல்கள் இருந்தும் தொலைக்காட்சிப் பெட்டியே கதி என்று எமது உலகத்தைக் குறுக்கிக் கொண்டு குறுகிப் போவது எதனால்...? சிந்தியுங்கள்!!! வீட்டுச் சிறையிலிருந்து நாம் விடுபடும் காலம் எது...? பெண்விடுதலை என்று நாகரிக மோகத்தை, ஆடைக் குறைப்பை நான் பேசவில்லை. நமது உணர்வுகளின் விடுதலையைப் பற்றி சிந்திக்கவே தூண்டுகிறேன். இங்கு வாழும் எமது பெண்களோடு ஒப்பிடுமிடத்து தமிழீழத்திலே வாழும் பெண்கள் உணர்வுகளால் விடுதலை அடைந்திருப்பதாகவே தோன்றுகிறது. எமது சுதந்திரத்திற்கான விடுதலைப் பாதையில் அணிவகுத்துச் செல்லும் தோழியரைக் காணும் போது அங்கு ஓர் யுகப் புரட்சி மலர்ந்து விட்டதாகத் தோன்றுகிறது. நாமும் அந்த மண்ணில் விழுந்த விதைகளல்லவா...? நாம் மட்டும் கள்ளிச் செடிகளாக வளர்வதெப்படி...? நாம் விரைவில் சிந்தித்து எம்மைச் சுற்றியிருக்கும் நான்கு சுவர்களுக்குள் ளிருந்து வெளி வராது போனால்.... புத்தி பேதலித்துப் போவோம். வீட்டுச் சிறைக்குள்ளிருந்து வெளிவந்து சமூகப் பிரஞ்ஞையுள்ள பெண்களாக சகலமும் கற்றுத் தேர்கிற தாகம் கொண்டவர்களாக மாறிடல் வேண்டும். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கூட "புதுமைப்பெண்" என்ற தன் பாடலில் அவ்வாறே குறிப்பிட்டுள்ளார்.

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேறவும்,
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்தங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்:
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்

இப்பாடல் பாரதப் பெண்களுக்கு மட்டும் பொருந்துவதாகக் கொள்ளலாகாது. மகாகவி பாரதி உலகிலுள்ள ஒடுக்கப்பட்ட, ஒடுங்கியிருக்கும் பெண்கள் அனைவருக்கும் பொதுவில் மொழிந்ததாய் எடுத்துக் கொள்வோம். எமது கால்களை எட்டி வைத்து விரைந்து செல்லும் உலகிற்கு இணையாக நடப்போம்.

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சைக் குழந்தையும் பயங்கரவாதமும்

~ இதயவாணி

கைகால் முளைத்து
சின்ன ரோஜா ஒன்று
முற்றத்தில் நின்று
முகை விட்டுச் சிரித்தது!
"அம்மா.....!
நான் நடக்கின்ற
அழகைப்பார்"
என்று
கன்னம் குழிவிழ
கவிநகை செய்தது!
அந்தச்
சின்ன மழலை
மெல்ல நடக்கும்
பின் மெதுவாய்ச் சரியும்
திண்ணையைப் பற்றித்
திரும்பவும் எழும்பும்
தோற்று விடாமல்
தொடர்ந்து நடக்கும்...!
பார்த்திருந்த அன்னையின்
இதயத்தில்
அந்தப் பஞ்சுப் பாதங்களின்
ஒவ்வொரு அடியும்
இசையின் நயமாய்
இனிமை சொட்டும்...!

திடீரென...
வானத்தில்....
ஆட்கொல்லிப் பறவைகள்
அசைந்தன...!
கோழிக் குஞ்சைக்
குறிவைக்கும் பருந்தாய்
குப்புறச் சரிந்தன...!
அந்தோ....!
மீண்டும் ஒருமுறை
அந்தக் கொடுமை நிகழ்ந்தது
மரணம் கூட
வாய்விட்டு அழுதது!

அந்த மழலை
மலர்க்குவியலாய்
மண்ணில் கிடந்ததைக்
கண்டால்...
காலனும் கதறுவான்...!
பிள்ளை...
நடக்கின்றது
அழகின் ஆனந்தம்
இன்னமும் மறையாது
அந்த இளம்தாயின் முகம்
முற்றத்தில் தனியே
வானம் பார்த்துக் கிடந்தது!
அதற்கப்பால்...
உயிரின் சூடு
இன்னமும் கொஞ்சம்
ஒட்டியிருக்கிற
தாமரைக் கால்கள்
தனித்துக் கிடந்தன.

ஆசை ஆசையாய்
அன்னை அணிவித்த
வெள்ளிக் கொலுசுகள்
இரத்த
வெள்ளத்தில் குளித்தன
சற்று முன் குடித்த
அன்னை முலைப்பால்
அந்த
சின்ன முகத்தில்
இரத்தமாய் வழிந்து
ஒவ்வொரு இடமாய்த்
தடவித் தடவி
உயிர் இருக்கிறதா
என்று
ஓடித் தவித்தது...!

மறுநாட்காலை..
அரச வானொலி
அறிவித்தது...!
பதுங்கியிருந்த
இரண்டு பயங்கரவாதிகள்
விமானக் குண்டு வீச்சில்
வீழ்த்தப்பட்டதாய்
விவரம் சொன்னது....!
ஒரு வயதுக் குழந்தையை
பயங்கரவாதியாக்கிய
அரசுக்கு
என்ன பட்டம்

கொடுக்கலாமென்று
இரவெல்லாம்
யோசித்தேன்...!
"என்னைத்
தேர்ந்தெடுத்து விடாதே"
என்று
கொடுமையைக் குறிக்கிற
ஒவ்வொரு வார்த்தையும்
கைகூப்பிக் கெஞ்சும்
மற்றவை
அருவருப்பில் ஒதுங்கும்...!
அறம் தொலைத்த அரசே!
நான்...
உனக்காக
அகராதி ஒன்றை
புதிதாக எழுத துணைசெய்
இன்னும் பல செயல்
இப்படிச் செய்து
புதிதாய் பல சொல் தருக...!
கொடுமையைக் குறிக்கும்
அந்த வார்த்தைகளைத்
தவற விடாமல்
நான்..
குறித்துக் கொள்ளுவேன்...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# YARLTON MARKET

**9 CLINTWOOD GATE #4 & 5A**
**On Victoria Park Ave**


**Photocopying & Fax Services**

**Tel/Fax: (416) 445-5352**
**Tel: (416) 445-5763**

Lotto 649, TTC டிக்கற், முத்திரை, Metro Pass
இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
பால், பழம், மரக்கறி வகைகள்,
உடன் இறைச்சி, கடலுணவு வகைகளுக்கு



# யாழ்ரன் மார்க்கற்



# வீடியோ மாருதி
# VIDEO MARUTY INC

சகலவித மங்களகரமான
வைபவங்களையும் நவீன முறையில்
*3 CCD* மூலம் வீடியோவில்
பதிவு செய்து தரப்படும்.

கிருபா: (416) 751-2060, 751-8143
1841 Lawrence Av. E., Scarborough, ON. (at Pharmacy)
இன்பன் (மொன்றியல்): (514) 989-5021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்பு

அருட்செல்வி அமிர்தானந்தர்! இவரின் தேமதுரக் குரலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நேயர்களும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ரசிகர்களும் மறந்திருக்க மாட்டார்கள். அந்தக் குரலின் இனிமையையும் குழைவையும் யாராலுமே மறக்க முடியாது. இவரின்



கலைப்பயணம் கடல்கடந்து வந்த இந்தக் கனடிய மண்ணிலும் தொடர்கிறது. இந்தக் குயிலின் குரலின் ஸ்பரிசத்திற்காக செவிகள் தவங்கிடக்கும் காலமொன்று வருமென்று என்மனம் சொல்கிறது. புலம்பெயர்ந்து வந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த பூமிக்கு இவர் 'கலையரங்கம்' வாயிலாக அறிமுகமானார். 'தமிழோசை' வானொலித் தயாரிப்பாளரான ஸ்ரீஸ்காந்தா அவர்களால் இவருடைய குரல் வானொலி நேயர்களுக்கு அறிமுகமானது. மேலும் கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இப்போதெல்லாம் இவருடைய குரலை அடிக்கடி கேட்க முடிகிறது. அத்தோடு 'வானவில்' போன்ற கலைநிகழ்ச்சிகளில் அளிக்கப்படும் சந்தர்ப்பங்களை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தி பரவசப்படுத்துகிறார். கர்நாடக சங்கீதத்தை உயிரென மதிக்கும் இவர் நாடகத் துறையிலும் தனது உயிரோட்டமான நடிப்புத் திறனால் முத்திரை பதித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவரின் கலைப்பயணத்தில் கடந்து வந்த பாதைகளில் அழுத்தமாகப் பதிந்துவிட்ட காலடிகள் இவரை ஒரு இளைய சாதனையாளர் என்று தயக்கமின்றிக் கூறத் தூண்டுகிறது.

1991ம்ஆண்டு அகிலஇலங்கை ரீதியாக நடைபெற்ற தமிழ்த்தின விழா போட்டியில் கலந்து கொண்ட இவருக்குக் கர்நாடக இசையில் முதலிடம் கிடைத்தது. அதற்காக தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவிக்கப்பட்டார். அதே ஆண்டு ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம் நடத்திய பண்ணிசைப் போட்டியிலும் தங்கப்பதக்கம் பெற்று பாராட்டுக்குரியவரானார். அதைத் தொடர்ந்து 1992ம் ஆண்டு அகில இலங்கை தமிழ்த்தின விழாவிற்கான போட்டிகளில் 'பா ஓதல்' என்கிற போட்டியிலும் கர்நாடக இசைப் போட்டிகளிலும் இவர் கலந்து கொண்டு முதற்பரிசுகளை தட்டிச் சென்றார். இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றமைக்காக இவருக்குத் தங்கப்பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. 1992ம் ஆண்டு Saarc அமைப்பினால் நடத்தப்பட்ட ஒரு நட்புறவுப் பயணத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் டெல்லிக்கு அனுப்பப்பட்ட மூவரில் இவர் ஒருவரே தமிழராவார். இவருடைய திறமைகளைப் பாராட்டும் வகையிலே இலங்கை அரசாங்கம் மேற்குறித்த சந்தர்ப்பத்தை அருட்செல்வி அவர்களுக்கு வழங்கியது. அந்த நட்புறவுப் பயணத்தின்போது சில நாட்கள் டெல்லியில் அரசு விருந்தினராகத் தங்கியிருந்த இவருக்கு இந்திய ஜனாதிபதியைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

இவ்வாறாக பிரமிப்பூட்டும் அந்த இளம் கலைஞரை ரோஜா சஞ்சிகைக்காக சந்திப்பதில் பெருமை அடைகிறோம். காற்றில் குளிரின் ஈரம் கொஞ்சம் ஒட்டி இருக்கிற இனிய மாலைப் பொழுதொன்றில் செல்வி அருட்செல்வி அமிர்தானந்தரை அவருடைய இல்லத்தில் சந்திக்கிறோம். ஒரு ஸ்நேகிக்கும் புன்னகையோடு எங்களை வரவேற்கிறார். பண்பான உபசரிப்பு, இதமான வார்த்தைகள், பலநாள் பழகியது போன்றதொரு கலகலப்பு இவற்றோடு கூடிய இனிய குடும்பம் அருட்செல்வி அவர்களுடையது. அந்த உணர்வு ஏற்படுத்திய சந்தோஷத்தோடு எமது கேள்விகளுக்கு வருகிறோம்.

*கலைத்துறையில் நீங்கள் எப்போது காலடி எடுத்து வைத்தீர்கள் என்று கூறமுடியுமா..?*

கலைத்துறை என்று அடையாளப்படுத்தி காலடி எடுத்து வைக்கும் அறிவில்லாத அதாவது ஐந்து வயதில் பாலர் பாடசாலையில் ஒரு கலைவிழாவில் "மாணிக்க வீணையேந்தும் மாதேவி கலைவாணி" என்ற பாடலைப் பாடினேன் அதுதான் நான் அரங்கொன்றில் பாடிய முதல் நிகழ்ச்சி.

*உங்கள் கலைப்பிரவேசம் என்பது ஒரு தற்செயலான நிகழ்வா அல்லது உங்கள் குடும்பத்தில் யாருக்காவது இசைத்துறையில் அறிமுகம் இருந்து அவர்கள் தூண்டுதலால் இத்துறைக்குள் பிரவேசிக்க நேர்ந்ததா?*

அரங்கேறும் அளவிற்கு யாருக்கும் பெரிய அளவில் அறிமுகம் இருந்ததில்லை. ஆனால் ஆழ்ந்த ஈடுபாடு எல்லோருக்குமே இருக்கின்றது. என் மாமா திரு. ஸ்ரீகிருஸ்ணராஜா அவர்கள் என்மீது காட்டிய அக்கறையே என் சங்கீதச் சுவடுகளின் ஆரம்பங்கள். இவர்களது தூண்டுதல்தான் என் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்தது.

*எங்கள் சமுதாயத்தை எடுத்து நோக்குமிடத்து கலைத்துறையில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பதை அவதானிக்கலாம். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் உங்களைப் போன்றவர்களின் முன்மாதிரி வரவேற்கத்தக்கது. அவ்வாறு பெண்கள் கலைத்துறையில் ஆர்வம் காட்டுவது குறைவாக இருப்பதற்கான காரணம் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*

இப்போது கலைத்துறையில் பெண்கள் ஈடுபடுவது குறைவு என்று சொல்ல முடியாது. கணிசமான அளவு பெண்கள் திறமையுள்ளவர்கள் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட சதவீதத்தினர் ஒதுங்கி இருக்கின்றனர் என்றால்... அதற்குக் காரணம் பெண்களது கலைவெளிப்பாட்டை கலைக் கண்ணோட்டத்துடன் மட்டும் பார்க்க மறுக்கும் எமது சமூகத்தின் ஒரு பகுதியும் பழைய மரபுகளை உடைத்து வெளிவரத் தயங்கும் பெண்களது தைரியமின்மையுமே ஆகும்.

*உங்கள் இசை வளர்ச்சிக்கு துணை நின்றவர்களைப் பற்றிக் கூற முடியுமா?*

நிச்சயமாக! என் சிறுவயதுப் பராயத்தில் சாஸ்திரீய சங்கீதத்தை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர் செல்வி. பரமேஸ்வரி கோவிந்தராஜா அவர்கள். இன்று இங்கு இந்த மண்ணிலே சங்கீதத்தில் என் வசப்படாமல் இருக்கும் பல்வேறு சங்கதிகளைச் சொல்லித் தந்துகொண்டிருக்கிறார் திருமதி. நவராஜகுலம் முத்துக்குமாரசாமி அவர்கள். என்னை ரூபவாஹினி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு அறிமுகப்படுத்தியவர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திரு. ரவீந்திரன் அவர்கள். என் இசை வளர்ச்சியில் முக்கியமான பங்கை வகிப்பவர்.

*கர்நாடக இசையைப் பொறுத்தவரை இலங்கை, கனடா ரசிகர்களுக்கிடையே அவர்கள் ரசனையில் ஏதாயினும் வித்தியாசங்களைக் காணமுடிகிறதா?*

கர்நாடக இசையை ரசிப்பதற்கு வெறும் ரசனை மட்டும் இருந்தால் போதாது. அதில் கொஞ்சம் ஈடுபாடும் இருக்க வேண்டும். கர்நாடக இசைக்கென தனி ரசிகர் குழாம் அங்கும் இருக்கிறது; இங்கும் இருக்கிறது. அங்கு அதாவது இலங்கையில் அது பரந்த அளவில் இருக்கின்றது. இங்கு குறிப்பிட்ட அளவில்தான் என நினைக்கின்றேன். இங்குள்ள சங்கீத ஆசிரியர்களின் முயற்சி இந்த ரசிகர் குழாமினை அதிகரிக்கச்செய்யும் என்பதே எனது கருத்து.



*இளைய தலைமுறையினருக்கும் கர்நாடக சங்கீதத்திற்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ்வாறு இளம் சமுதாயம் கர்நாடக சங்கீதத்தை விரும்பாது இருக்கக் காரணம் என்ன?*

மன்னிக்க வேண்டும்!
விரும்பவில்லையென ஒரேயடியாகக் கூறிவிட முடியாது. நானும் இளம் சமுதாயத்தில் ஒருத்திதானே.... இங்கு நடைபெறுகின்ற சங்கீத வகுப்புக்களில் பல மாணவர்கள் ஆர்வத்தோடு கர்நாடக சங்கீதத்தைப் பயில்கின்றனர். எனினும் கர்நாடக இசைக்கும் இளம் சமுதாயத்தினருக்குமான இடைவெளி இங்குள்ள நிர்பந்த சூழ்நிலைகள் காரணமாக சற்று அதிகரித்திருப்பதை மறுக்கமுடியாது.

*இளைய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல; பெரியவர்கள்கூட இப்போது நடைபெறுகின்ற விழாக்களில் கர்நாடக சங்கீதத்தை அனுபவித்து ரசிப்பது குறைவு. இந்த நிலையை மாற்றுவதற்கான வழிவகைகள் என்ன..... ஏனெனில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எந்தக்கலையும் மக்களைச் சென்றடைய வேண்டுமல்லவா? மக்களின் ரசனையை, இது சம்பந்தமாக அதிகரிக்க என்ன மாற்றங்களைச் செய்யலாம்?*

கர்நாடக இசை சாஸ்திர சம்பிரதாயங் களுக்கு உட்பட்ட ஸ்வர, லய, சுத்தமான ஒழுங்கமைப்பு. அந்த மரபுக் கட்டுப்பாடுகளை மீறி மாற்றங்களைச் ஏற்படுத்தி ரசனையை அதிகரிக்கச் செய்யமுடியாது. ஆனால்.... சற்று ஜனரஞ்சகமாகப் பாடலாம்; மரபு எதையும் மாற்றாமலே. இவற்றை 'துக்கடா' பாடல்கள் என்று கூறுவார்கள். இவைகளால் ரசிகர்கள் அதிகரிக்க வாய்ப்பு உண்டு.

*ஆலயங்களில் சொல்லும் சமஸ்கிருத மந்திரங்கள்போல தெலுங்கு கீர்த்தனங்களும் புரிவதில்லை. இவற்றை தமிழ் வடிவில் மாற்ற முடியாதா....?*

சங்கீத வாக்கியக்காரர்களால் தெலுங்கு மொழியிலேயே அநேகமான கனமான உருப்படிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. இவற்றை மொழி பெயர்ப்பது என்பதோ மாற்றம் செய்வது என்பதோ சாத்தியமற்ற ஒன்று. "சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைப்போம்" என்று இசைக்குத் தெலுங்கு மொழியைத் தேர்ந்தவன் பாரதி! அந்த ஆலாபனைகளில் ஒரு தெய்வீகம் இருப்பதை அனுபவிப்போர் உணர்வார்கள். ஆனால் அதிலிருந்து உருவான கர்நாடக இசையை அழகு தமிழில் புரியும் வகையில் அற்புதமாகப் பாடலாம். இதைப் பலர் செய்கின்றனர். அத்தோடு இன்னுமொன்று சொல்ல வேண்டும். இந்த மண்ணில் பல மாணவர்கள் சங்கீதத்தை ஆங்கிலத்திலேயே எழுதிப் படிக்கின்றார்கள். இசையின் தாய்மொழியும் தம் தாய்மொழியும் மறந்து அந்நிய மொழி ஒன்றை இசை பயிலப் பயன்படுத்துவது வேதனைக்குரியது. கீர்த்தனைகள் தமிழாக்கம் செய்யப்பட வேண்டுமென்ற கருத்தை விட, சங்கீதம் தமிழில் கற்பிக்கப்படாமை என்ற பிரச்சனையே முதலில் கவனத்திற்கெடுக்கப்படல் வேண்டும்.

*கர்நாடகக் கலைகள் எதிர்காலத்தில் அருகிப் போகும் அபாயம் உண்டு. இதைத் தடுத்து நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இம்முயற்சியில் உங்கள் பங்கு எவ்வகையில் அமையுமென்று கூற முடியுமா?*

"கர்நாடகக் கலைகள் எதிர்காலத்தில் அருகிப்போகும்" என்ற கூற்று புலம்பெயர்ந்த பூமிகளுக்கு ஓரளவு ஒத்துப் போகலாம். ஆனால் தாயக பூமியில் இவை அருகிப்போக ஒருபோதும் வாய்ப்பில்லை. கர்நாடக சங்கீதத்தில் இப்போது நான் தொட்டில் குழந்தைதான். சிலவேளை இசையின் வளர்ச்சி நிலைகளை நான் தொட்டுவிட முடிந்தால்..... இந்தப் புலம்பெயர்ந்த மண்ணிலே இக்கலைகள் வளர என்னால் இயன்றதைச் செய்வேன். இப்போது இந்தப் பொறுப்பினை உணர்ந்த பல பெரியவர்கள் நம் மத்தியில் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

*இப்போது இங்குள்ள ஆசிரியர்களில் சிலர் இசையை ஆங்கிலத்தில் கற்பிப்பதாக அறிகிறோம். நீங்கள் ஒரு சங்கீத ஆசிரியராக வந்தால் தமிழிலா அல்லது ஆங்கிலத்திலா கற்பிப்பீர்கள்?*

ஆங்கிலத்தில் கற்பிப்பேன்; பயில வருவோர் தமிழராக இல்லாது இருந்தால் மட்டும். இசை மொழிகளுக்கு அப்பாற்பட்டது. அதை ரசிக்க மொழிகள் அவசியமில்லை. ஆனால்... கீழைத்தேய இசையான கர்நாடக இசையை கீழைத்தேய மொழி ஒன்றினாலேயே சிறப்பாகக் கற்பிக்க முடியும். கர்நாடக இசை தமிழுக்கு மட்டுமல்ல;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய மொழிகள் எல்லாவற்றிற்கும் பொதுவானது. நான் தமிழ் மாணவர்களுக்கு நிச்சயம் தமிழில்தான் கற்பிப்பேன்.

*ஏதாவது இசைக்கருவிகளில் உங்களுக்குப் பரிச்சயம் உண்டா?*

வீணையில் கொஞ்சம் பரிச்சயம் உண்டு.

*கனடிய மண்ணில் உங்கள் அறிமுகம் எப்படி நிகழ்ந்தது?*

இந்த மண்ணில் என்னை அறிமுகப்படுத்தி வைத்தவர் கலையரங்கம் திரு. விஷ்ணு அவர்கள். கலையரங்கம் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் என்னை அவர் அறிமுகம்செய்து வைத்தார். தொடர்ந்து வானவில் கலை நிகழ்ச்சிகளில் திரு. சொர்ணலிங்கம் அவர்கள் வாய்ப்பளித்தார்கள்.

*கனடிய வனொலிச் சேவைகளில் உங்கள் பங்கு பற்றிக் கூறுங்களேன்....*

கனடாவிலே வானொலி நிகழ்ச்சிகளுக்காக என்னை அணுகி என்னை அதில் பங்கு கொள்ளச் செய்தவர் தமிழோசை நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திரு. ஸ்ரீஸ்காந்தா அவர்கள். அந்த நிகழ்ச்சிகளில் நான் சோபிக்க ஊக்கமும் ஒத்துழைப்பும் தந்தவர் திரு. கலாதரன் அவர்கள். இன்று திரு. இளையபாரதி அவர்கள் தன்னுடைய கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிறைந்த வாய்ப்புக்களை எனக்கு வழங்கி வருகிறார்.

*எப்போது நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தீர்கள்?*

அப்போது எனக்கு சுமார் பத்து வயது இருக்கும். ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தியில் நடைபெற்றஒரு சரித்திர நாடகத்தில் கூனியாக வேடமேற்று நடித்தேன். இதுவே என் முதல் நாடக அனுபவம்.

*நாடகக் கலையில் உங்கள் குரு யார்?*

குருவிடம் சென்று நாடகம் பயின்று நடிக்கும் சூழ்நிலையும் வயதும் இல்லாத நிலையில்தான் என் நாடக அறிமுகம் நடந்தது. இதுவரை நான் எந்த நாடக பள்ளிக்கும் சென்று பயின்றதில்லை. ஆனால்... என் பெருமதிப்பிற்கும் அன்பிற்குமுரிய பேராசிரியர் கலாநிதி மௌனகுரு அவர்களின் ஆலோசனைகளும், விளக்கங்களும் எனக்கு கிடைத்து வந்துள்ளன. இவ்வகையில் இவரை நான் நன்றியோடு நினைவு கூரலாம்.

*மேடை ஏறி நடித்த பாத்திரங்களுள் உங்களுக்கு மிகவும் பிடித்தமான பாத்திரம் எது?*

நான் முதலில் ஏற்று நடித்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கூனி என்கிற பாத்திரப்படைப்பே எனக்கு மிகவும் பிடித்தது. காரணம் இயல்பான எனது தன்மைக்கு முற்றிலும் மாறான ஒரு வில்லிப் பாத்திரத்தில் நடித்தது எனக்கு மிகவும் சவாலானதொன்றாக அமைந்தது. அத்துடன் என் சிறு வயது இயல்பை அப்படியே மாற்றி வயதான-வராக, வளைந்து அந்த வேடத்தில் நடித்து நான் பாராட்டுப் பெற்றது மறக்க முடியாத ஒன்றல்லவா?

*நீங்கள் நாடகங்களில் நடிக்கும் போது ஏதும் சங்கடங்கள், சங்கோஜமான சூழ்நிலைகள் ஏற்பட்டதுண்டா?*

நாடகங்களில் எப்படியும் நடிக்கலாம் என்று சொல்வோர்க்கு எப்பிரச்சனையும் ஏற்பட வாய்ப்பிருக்காது. ஆனால் சில கொள்கைகளோடு நடிக்கப் போகும் போது சில சங்கடங்களைச் சந்திக்க வேண்டி ஏற்படலாம். கொண்ட கொள்கைகளில் முன்கூட்டியே தெளிவும் உறுதியும் இருந்தால் அச்சங்கடங்கள் சுலபமாகத் தவிர்க்கப்பட்டு விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிப்பில் நான் இப்படித்தான் இருக்கின்றேன்.

*இந்த இளம் வயதில் நடிப்பது பிரச்சனைகள் எதையும் உங்களுக்கு ஏற்படுத்தவில்லையா?*

இளம்பெண் நாடகத்தில் நடிக்கிறாள் எனும் போது சமூகத்தின் பார்வையில் சில பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. பிரச்சனைகளுக்குப் பயந்து பின் வாங்கினால் உண்மையில் அது எம் பலவீனமே.! எனினும் நடிக்கும் நாடகங்களையும் அதன் சூழ்நிலைகளையும் ஆராய்ந்து நடித்தால் பிரச்சனைகளை ஓரளவிற்கேனும் தவிர்த்துக் கொள்ள முடியும். நான் இவ்வகையிலே செயற் படுவதால் பிரச்சனைகளைப் பெருமள வில் குறைத்துக் கொண்டிருக்கின்றேன்.

*நீங்கள் நடித்த நாட்டுக்கூத்துக்கள் எவை?*

காத்தவராயன் கூத்து, வேழம் பழுத்த வீராங்கனை என்பன நான் நடித்த பிரபல கூத்துகள். நாட்டுக்கூத்தில் எனது குரு என்று சொல்லப்போனால் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு. அருணா செல்லத்துரை அவர்களைத்தான் குறிப்பிட வேண்டும்.

*நாட்டுக்கூத்து பற்றியதான உங்கள் கருத்தை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கிளேன்.....*

அது... மிக அற்புதமான நம்நாட்டுக்கலைப் பொக்கிஷம்! அதனோடு உள்ளடங்கி இருக்கும் நுணுக்கமான அசைவுகள், பிரதேசப்பிரதிபலிப்புகள் ஆழமானவை. நானே அதில் பங்கேற்கும் வரை அவற்றின் தாற்பரியத்தை உணரவில்லை. அன்று அதை ஒரு தெய்வீக கலையாகவே கலைஞர்கள் கருதுவார்கள். வடமோடி, தென்மோடி, முல்லைமோடி என்பன பிரபல கூத்து வகைகளாகும்.



*நமது கலை கலாசார பண்பாட்டு பழக்க வழக்கங்களை ஒருபுறம் ஒதுக்கித்தள்ளி விட்டு புலம்பெயர்ந்த நாட்டின் பழக்கவழக்கங்களை நாகரிகங்களைப் பின்பற்றவே இளைய சமுதாயத்தினர் விரும்புகிறார்கள் என்று பெரும்பாலானோரால் கருதப்படுகிறது. நீங்களும் மாணவ சமூகத்தின் ஓர் அங்கம் என்பதால் கேட்கிறேன் இப்பிரச்சனையைத் தீர்க்க நீங்கள் கூறும் ஆலோசனைகள் எவை?*

இது இங்கு நம் சமூகம் சார்ந்த பெரிய பிரச்சனை. அதற்குத் தீர்வு சொல்லும் அளவிற்கு என்னிடம் முதிர்ச்சிஇல்லை. எனினும் நான் ஒரு பாடசாலை மாணவி என்ற அளவில் என் கருத்தைச் சொல்லுகிறேன்.வளருகின்ற இளம் சமூகத்தின் சூழல், பல்லின கலாசார சூழல். ஒரே வயது, பருவம் போன்ற ஒத்த நிலைகளில் மாற்றுக் கலாசாரத்தின் ஊடுருவல் சாதாரணமாகவே நிகழ்ந்து விடுகின்றது. இதை ஒத்த வயதுடையோர் தாக்கம் (peer pressure) என்று சொல்லுவார்கள். ஒவ்வொருவரும் தம் தாய்மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரத்தின் தாற்பரியத்தை நன்கு உணர்ந்தால் மட்டுமே இதைத் தவிர்க்க முடியும்.

*இங்குள்ள சில பெற்றோர் தமது பிள்ளைகள் ஆங்கிலத்தில் பேசுவதை பெருமையாக எண்ணுகிறார்கள். ஆதனால் ஆங்கிலத்திற்குக் கொடுக்குமளவு முக்கியத்துவம் தமிழுக்குக் கொடுப்பதில்லை. அது குறித்து உங்களது அபிப்பிராயம் என்ன?*

பெற்றோர் பெருமையாக நினைப்பதில் தவறில்லை; பிள்ளைகள் ஆங்கிலத்தைத் தாய்நாட்டில் பேசினால், இங்கு இந்த அந்நியச் சூழலை சரியாகப் புரிந்து கொள்ளாத சில பெற்றோர்களால் அப்பெருமை இங்கு பேசப்படுவது உண்மையே! அவர்கள் தாய்மொழிக்கு உரிய இடத்தையும், மதிப்பையும் கொடுத்திருந்தால் இப்பெருமையில் தப்பில்லை. ஆனால் தாய்மொழியைமறந்து "தமிழ்" இல்லை....... "தமில்" பேசினால் அதன் விளைவுகள் பாரதூரமானவை. அதை நம் பெற்றோர்கள் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

*(எமது அடுத்த கேள்வியை அருட்செல்வி அவர்களின் தந்தையாரிடம் கேட்கிறோம்)*

*உங்கள் மகள் கலைத்துறையில் வளர்ச்சியடைந்து வருவது பற்றி உங்கள் எண்ணங்களை எங்களோடுபகிர்ந்து கொள்ள முடியுமா?*

தந்தை: அதில் எனக்குப் பெருமைதான். ஆனால் அதற்குக் காரணமாய் இருப்பவர் இவருடைய தாயார்தான். அவரிடமே இதுபற்றிக் கேளுங்கள்.

*(அந்தக் கேள்விக்கு அருட்செல்வி அவர்களே பதிலளிக்கிறார்)*

என் தந்தையார் இங்கு வந்து நீண்டகாலம். இலங்கையிலே என் அம்மாதான் எனக்கு எல்லா வகையிலும் ஊக்கம் தந்து உறுதுணையாக இருந்தார். அப்பா அருகில் இல்லாத நிலையில் என் கலையார்வத்திற்கும் திறமைகளுக்கும் தளைகளைப் பிணைக்காமல் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் என்னை அழைத்துச் சென்று, என் வளர்ச்சியின் ஒவ்வொரு படியிலும் ஊன்றுகோலாய் நின்று உயர்த்தியவர் என் அன்புத் தாயார்தான்.

*இந்த சந்திப்பை நிறைவு செய்யும் வகையில் உங்களிடம் ஒரு கேள்வி... ஒவ்வொருவருக்கும் வாழ்வில் ஒரு இலட்சியம் இருக்கும். உங்களுக்கும் அப்படி ஏதாயினும்குறிக்கோள், கனவு இருக்கின்றதா?*

இசை! எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. என் சூழ்நிலைகளின் ஒத்துழைப்பில் நான் இசையின் உயர்நிலைகளைத் தொட்டுவிட முனைந்தால்... அதுவே என் வாழ்வின் உன்னத இலட்சியமாக இருக்க முடியும்.

*நன்றி அருட்செல்வி! ரோஜா சஞ்சிகைக்காக உங்களைச் சந்தித்ததில் பெரு மகிழ்ச்சி யடைகிறோம். உங்கள் இலட்சியம் ஈடேற எங்கள் வாழ்த்துகள்!*

நன்றி! உங்களைச் சந்திக்க நேர்ந்ததில் எனக்கும் மகிழ்ச்சியே! என் கலைப் பயணத்தில் வழித்துணையாய் வந்த அனைத்து நெஞ்சங்களுக்கும் இந்த வேளையில் நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன்.

*வணக்கம்!*

*வணக்கம்!*

உங்களுக்குத் தேவையான அச்சமைப்பு, அச்சடிப்புத் தேவைகளை நியாயமான விலையில் செய்துகொள்ள... (416) 425-2884



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUTO MECHANIC SHOP

உங்களின் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் எம்மை நாடுங்கள். உங்கள் மனநிறைவுக்கு நாங்கள் உத்தரவாதம்.



## IRIE CA SERVICES

**86 MELFORD DR, UNIT.14,**
**SCARBOROUGH, ONT.**


- *Tune-up*
- *Brakes*
- *Transmission & Engines rebuilt*
- *Air-Condition*
- *Body Work*

Domestic, European & Japanese car & Vans.

We are specialized in **HONDA**

**தொடர்புகளுக்கு:-**

S. Ruban
(416) 299-0452







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி அருட்செல்வி
அமிர்தானந்தரை
சந்தித்து விட்டு வெளியே
வந்தபோது எனக்குள்
எழுந்த பிரமிப்பு,
ஆச்சரியம்,
சந்தோஷத்தை
சொற்களில்
வடித்திருக்கிறேன்.

சகோதரி...!
கம்பராமாயணத்தை
கால்மணியில் முடித்துவிட
நினைத்த
முட்டாளைப்போல்
ஒரு மணித்தியாலத்தை
உனக்கென ஒதுக்கி
உள்நுழைந்தேன்!
உட்கார்ந்த பிறகுதான்
தெரிந்தது;
நீ ஒன்றும்
கையடக்க கவிதைப்
பிரதியல்ல;
வழிப்பயணத்தில் வாசித்து
முடித்து விட!

பாரதியின் கனவே!
எனக்கு
ஒரு ஆச்சரியம்!
நீ என்ன...
ஞானசம்பந்தரைப் போல்
ஞானப்பால்
உண்டவளா...?
கலைகள் உன்னிடத்தில்
கைகட்டி நிற்பதென்ன...!
கலைமகள் உன்நாவில்
களிநடம் புரிவதென்ன!

பதக்கங்கள்
பாராட்டுப் பத்திரங்கள்...
கோப்புக்குள்
நிறைந்திருக்கும்
சான்றிதழ்கள்....
பார்த்துக் களைத்தேன்;
பரவசத்தில்
நெகிழ்ந்தேன்!
உன் வரையில்...
வயதுக்கும்
வாழ்க்கைக்கும்
என்ன சம்பந்தம்?
உண்டு, உடுத்து
உறங்கி...
ஓய்வது மட்டும்
வாழ்க்கையல்ல
என்று
வரையறை செய்தவளே!
நாங்கள்...
நடந்து வந்த சுவடுகள்
காற்றடித்த காரணத்தால்
கலைந்து போயின!
ஆனால்..
உன் பாதையிலோ
அழிக்க முடியாத
கலையின் காலடிகள்!

பெண்ணினத்தின்
பெருமையே...!
குரலெடுத்துக் கூவுகிற
குயிலே...!
கலைகளுக்கும்
மக்களுக்கும்
இடையிலே
பாட்டாலே
ஒரு
பாலம் போடு!
இசை கேட்டு
தலை அசைக்கும்
கூட்டத்திடை கலந்து
கலை கற்பிப்பது என்ன
என்று காண்பி...!
இசை என்பஃது..
ரசிக்க மட்டுமல்ல;
மனிதரை நேசிக்கவும்
என்றுசொல்லிக் கொடு!

ஸ்நேகிதி!
உன்
தேவகுரல்...
காயம்பட்டுக்கிடக்கும்
மானுட இதயங்களுக்கு
மருந்தாகட்டும்!
மேடையில்
ஏற்கிற பாத்திரங்கள்
நிஜ வாழ்வில்
நடிப்பவர்களின்
முகத்திரை கிழிக்கட்டும்!
உன் பேச்சுத்திறத்தாலே...
புதியதோர்
விதி செய்க...!
பெண்கள்...
பூவின் சாயல் என்போர்
இனி...
புயலின் வேகம்
காண்பார்!

★★★★★



ஆனி இதழின்
சிறப்பாசிரியர்
தமிழருவி சந்திரமோகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் முன் நான்



இந்த ரோஜா மலரிலே ஒரு இதழாக உங்களைச் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நான் பிறந்து வளர்ந்த இடமான கிளிநொச்சியைவிட்டு இந்த கனடிய மண்ணில் கால் பதித்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. பச்சைப் பசேலென பரந்து கிடக்கும் வயல் வெளிகள் நிறைந்த கிராமம் தான் எனது பிறப்பிடமான முரசுமோட்டை.

கிளிநொச்சி மாவட்டத்திலே நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கும் இடங்களில் இது முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இந்தக் கிராமத்தில் தான் எனது ஆரம்பக் கல்வி அத்திவாரமிடப்பட்டது. கிளி/முருகானந்த மகா வித்தியாலயம் இதுதான் எனது பதினொரு ஆண்டு கால வாழ்வை உரமிட்டு வளப்படுத்திய பாடசாலை. இங்கே க.பொ.த (சா/த) பரீட்சையிலே முதன்மைப் பெறுபேறு பெற்று சித்தியடைந்தேன். இங்கு க.பொ.த (உ/த) இல் கலையும் வர்த்தகமும் மட்டுமே அப்போது இருந்தது. நான் விஞ்ஞானப் பிரிவில் படிப்பதற்காக வேறு பாடசாலையில் சேரவேண்டி இருந்தது. அதனால் யாழ். மத்திய கல்லூரியில் சேர்ந்து எனது உயர்கல்வியைத் தொடர்ந்தேன். தொடர்ந்து நடந்த யுத்த சூழ்நிலையால் என்னால் கல்வியை சீராக தொடர முடியவில்லை.

நான் பிறந்து வளர்ந்த கிராம வாழ்க்கை தான் என்னை இந்த இலக்கியத் துறைக்கு அழைத்து வந்தது. எனது அந்தப் பசுமையான நினைவுகள் அவ்வப்போது மனதைத் தட்டுகின்றன. அந்த வயல்களில் இருந்து வரும் குளிர்ந்த காற்றை நினைக்கும்போது இன்றும் எனது மனம் குளிர்கின்றது. எனது நண்பர்களுடன் சிறு வயதில் சுற்றித் திரிந்த அந்த மண் வீதிகள், அருவிகளில் நீச்சல் அடித்துத் திரிந்த அந்த நாட்கள், இவை எல்லாம் என் நேசிப்பில் இருந்து என்றும் மறக்கமுடியாதவை. இயற்கை வளம் நிரம்பிய அந்தக் கிராமத்தில் நான் பிறந்ததற்காக என்றும் இறைவனுக்கு நன்றி கூறுவேன்.

இவற்றை எல்லாம் ஏதோ ஒரு வகையில் எழுத வேண்டும் என என் மனம் தூண்டும். ஆனால் இயந்திர மயமான இந்த நாட்டில் நேரம் கிடைப்பது அரிது. எனினும் இந்த மலரில் எனது ஆக்கங்களுக்கு உங்களின் எண்ணக் கருத்துக்களைவண்ணமுடனே நாடிநிற்கும் இவன்

க. நாவேந்தன்

## எழுத்தாளர் அரும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் உலகம் வேண்டும்!



புவியில் வாழ எனக்குப் பிடிக்கவில்லை - அதனால்
புறப்பட்டு விட்டேன் புதிய உலகம்தேடி
நான் சமாதானத்தை விரும்புகின்றேன் - அதனால்
பூமியில்வாழ எனக்கு சம்மதமில்லை
நான் அன்பை விரும்புகின்றேன் - அதனால்
இந்த அகிலத்தில் வாழ எனக்கு அனுமதியில்லை

அப்படியானால் நான் எங்கே செல்வது....
நிலவுக்கு... அங்கு சுவாசிக்கக் காற்று இல்லையே!
இருக்கட்டுமே... இங்கு காற்று இருந்தும் - நான்
சுவாசிக்காமலே வாழ்கின்றேனே!
அங்கு தண்ணீர் இல்லை...
இங்கு ஓடும் செந்நீர் ஆறுகளைப் பார்த்ததால்
நான் தண்ணீரையும் மறந்துவிட்டேனே!





இங்கு சமாதானத்திற்காக புறாவை பறக்கவிடுவதாக
சமாதானத்தையே பறக்கவிட்டுவிட்டார்களே!
அன்பாய் இருப்போம் என்றுகூறி
அணுகுண்டை உருவாக்கிவிட்டார்களே! - அதனால்
புவியில் வாழ எனக்கு பிடிக்கவில்லை
புறப்பட்டுவிட்டேன் புதியதோர் உலகம்தேடி!

## விசும்பல்கள்

பெண்ணைப் படைத்த இறைவனே - ஏன்தான்
கண்ணைப்படைத்தாயோ!
அவள் இதயத்தைப் படைத்த இறைவனே - ஏன்தான்
இரும்பைப்படைத்தாயோ!
இரவைப் படைத்த இறைவனே -ஏன்தான்
நிலவைப்படைத்தாயோ!
என்மனதைப் படைத்த இறைவனே - ஏன்தான் அவள்
நினைவைப்படைத்தாயோ!
உறவைப் படைத்த இறைவனே - ஏன்தான்
பிரிவைப்படைத்தாயோ!

~ க. நாவேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மா இல்லை என்றால் பிணத்திற்கு ஏது அலங்காரம்?

~ கவிஞர் வைரமுத்து

## பட்டி மன்றத்தில் தெறித்த முத்துக்கள்

ஒருவர் படித்த கல்லூரிக்கே அவருடை படைப்புக்கள் விமர்சனத்திற்கு வருவதென்பது சாதாரண விஷயமல்ல. ஒரு நூற்றாண்டில் எப்போதாவது, யாருக்காவது கிடைக்கின்ற பாக்கியம் அந்த இருபதாம் நூற்றாண்டின் பாக்கியசாலி வைரமுத்து. அவர் படித்த பச்சையப்பன் கல்லூரியில் டாக்டர் அவ்வை நடராஜனை நடுவராகக் கொண்டு நடைபெற்ற "கவியரசு வைரமுத்து கவிதைகளிலும், திரைப்படப் பாடல்களிலும் விஞ்சி நிற்பது கற்பனை வளமா கருத்து ஆழமா" என்ற பட்டி மன்றத்தில் தெறித்த சில முத்துக்கள்............




டாக்டர் தெ. ஞானசுந்தரம்

அரசியல் பற்றி கவிதை ஒன்று 'வியாபாரம் செய்ய வந்தவர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள் ஆட்சிக்கு வந்தவர்கள் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்' என்று எழுதியிருக்கிறார், பாரதியின் தாக்கம் இந்த கவிதையில் தெரிகிறது.

அவ்வை நடராஜன்
(முன்னாள் துணைவேந்தர் தமிழ் பல்கலைக்கழகம்)

ஆறுகோடி மக்களை கவர்ந்த கவிஞர் இவர். தமிழ் நாட்டில் குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை இவரைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். பாடல் எழுதாமல், கவிதை, இலக்கிய ஆராய்ச்சியிலேயே மட்டும் கவனம் செலுத்தியிருந்தால்........ தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்திருப்பார் வைரமுத்து.

இந்தியத் திரைப்பட வரலாற்றில்........ தமிழுக்குக் கடந்த ஐம்பது ஆண்டுகளில் மூன்று முறை விருது பெற்றுத் தந்தவர் வைரமுத்து மட்டுமே. அப்போது கூட 'இது என் தோளுக்கு வந்த மாலை அல்ல. என் தமிழுக்குத் தந்த மாலை' என்கிறார். 'கண்ணாளனே' என்ற வார்த்தையை கடந்த நாற்பது ஆண்டுகளில் தமிழில் நான் கேட்டதேயில்லை, அதை நிவர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவர் வைரமுத்து" என்றார்.

அரங்க இராமலிங்கம்

நானும், வைரமுத்துவும் இதே கல்லூரியில் ஒன்றாகப் படித்தோம். 1972ல் இரண்டாம் ஆண்டு இளங்கலை படித்துக்கொண்டிருந்த போதே அவருடைய 'வைகறை மேகங்கள்' முதற் கவிதை தொகுதி வெளியானது. அதிலுள்ள ஒவ்வொரு வரியையும் மனப்பாடம் செய்து ஒப்பிப்பேன். எதைச் சொல்கிறோம் என்பதை விட எப்படிச் சொல்கிறோம் என்பதுதான் முக்கியம்.

பேராசிரியை பிரேமா குமார்

விலைமகளாக இருக்கிறேன் கர்த்தரே இந்த வாழ்க்கை தான் வாய்க்கும் என்று தெரிந்திருந்தால் கருவிலேயே கலைந்து போயிருப்பேன்.

விலைமகளைப் பற்றி எழுதிய கவிதையில் இப்படிக் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வை நடராஜன்

பட்டிமன்ற நடுவராக இருந்த அவ்வை நடராஜன் வழங்கிய தீர்ப்பு வைரமுத்துவின் கவிதைகளில் கருத்து ஆழத்தை விட கற்பனை வளமே உயர்ந்து நிற்கின்றது.

கற்பனை என்பது ஒரு சிறகு, கருத்தாழமென்பது ஒரு சிறகு. இப்போதைக்கு கற்பனை வளம்தான் முக்கியம், எண்ணங்களை எடுத்துச் சொல்ல இன்னும் காலம் இருக்கிறது என்றார்.

கவிஞர் வைரமுத்து

சிறப்புரை ஆற்றிய வைரமுத்து "இந்த பச்சையப்பன் கல்லூரி எனக்குத் தாய் வீடு மட்டுமல்ல மாமியார் வீடுந்தான். தமிழைக் கற்றுக் கொடுத்ததால் தாய் வீடு. என் துணை பொன்மணியை அள்ளிக் கொடுத்ததால் மாமியார் வீடு. 1970ல் திசை தெரியாமல் இந்த கல்லூரிக்கு வந்தேன்.
குடுகுடுப்பைக்காரன் மாதிரி ஒரு சட்டை, ஆறு ரூபாய் செருப்பு........ உருவத்திலோ, தோற்றத்திலோ பச்சையப்பன் கல்லூரியில் வளாகத்துக்குள் வரக்கூடாதவனைப் போலிருக்கும். அப்பொழுது எல்லோருமே என்னை வேடிக்கை பார்ப்பார்கள். அண்ணா படித்த கல்லூரியில் பயில்வது என்னுடைய கனவு.

வைரமுத்து என்பவன் சராசரி மனிதன். நான் கம்பி எனக்குள் ஓடுவது தமிழ் மின்சாரம்.... அதனால்தான் எனக்கு மரியாதை. எனவே இந்த பட்டிமன்றத்தின் நோக்கம் இந்த பச்சையப்பன் கல்லூரியில் நூறு 'அண்ணா' க்களும், ஆயிரம் வைரமுத்துக்களும் உருவாக வேண்டும் என்பதுதான்,

கட்டிக்காத்து வந்த தமிழ் உணர்வு மங்கிக்கொண்டிருக்கிறது. எதனால் என்று யோசித்துப் பாருங்கள். இப்போது தமிழனின் மாறாத அடையாளமாக மொழி மட்டுமே இருக்கிறது. அந்த மொழியைக் காப்பாற்றுவது நம் கடமை. கற்பனையை மட்டுமே நான் எழுதவில்லை. யதார்த்தத்தை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கின்றேன்.

அழைக்கப்பட்ட வண்டிற்கு உள்ளே இருக்கும் தேன் தான் கருத்து ஆன்மா இல்லை என்றால் பிணத்திற்கு ஏது அலங்காரம். எனவே கருத்து இல்லை என்றால் கற்பனை ஏது என்றார் வைரமுத்து.

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதறிய செய்திகள்

தற்போது விளையாடும் கிரிக்கட் வீரர்களில் மிகவும் கூடுதலான காலம் விளையாடும் டெஸ்ட் ஆட்டக்காரர் ஸ்ரீலங்கா கிரிக்கட் தலைவர் அர்ஜுன ரணதுங்கா.

★★★

ஏப்ரல் மாதம் ஸ்ரீலங்கா அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையே ரினிடாட்டில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கட் போட்டியில் ஸ்ரீலங்கா அணி வெற்றிபெற்றது.

★★★

மேற்கிந்தி தீவுகள் அணிக்கும் நியூசிலாந்து அணிக்குமிடையே நடை பெற்ற இரண்டு டெஸ்ட் தொடர் கிரிக்கட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் கோஷ்டி 1-0 என்ற அடிப்படையில் வெற்றியீட்டியது.

★★★

சார்ஜாவில் இடம்பெற்ற இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா சம்பியனாகியது.

★★★



அட்லாண்டாவில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் கனடா தங்கம், வெள்ளி ஆகிய இரு பதக்கங்களையும் வெற்றி கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் 4x100 அஞ்சலோட்டத்தில் தங்கப்பதக்கம் தமக்கேயென கனடா அணி கூறுகின்றது.

★★★



பிரபல டெனிஸ் வீராங்கனையான ஸ்டெபி கிராவ் அதிககாலம் தனது தரத்தை முதலாம் நிலையிலே வைத்திருந்து சாதனை ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றார்.

★★★



புகழ்பெற்ற கூடைப்பந்து வீரர் மைக்கல் ஜோர்டன் 1996ம் ஆண்டுக்கான மிகவும் பெறுமதிமிக்க வீரராக (MVP) தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் சிக்காக்கோ புல்ஸ் விளையாட்டுக் கழகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தம் இந்த ஆண்டுடன் முடிவுறுவது குறிப்பிடத்தக்கது. எந்தக் கழகம் என்ன விலைகொடுத்து அவரை வாங்கப்போகின்றதோ தெரியாது.

★★★

இங்கிலாந்தில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள இந்திய அணி, இங்கிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் 2-0 என்ற கணக்கில் தோல்வியைத் தழுவியது.

★★★

உங்களுக்குத் தேவையான அனைத்து அச்சமைப்புத் தேவைகளையும் அழகானமுறையில் நிறைவேற்றிக்கொள்ள....

எல். கிரிஷோத் ரைப்செட்டிங்

(416) 425-2884



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிந்தியா

*ரம்யா: Hey! மோகன். நான் எவ்வளவு நேரம் உம்மைப் பார்துக் கொண்டு இந்த Mall க்குள்ள நிக்கிறன். நீர் late ஆக வாறீர்!*

மோகன்: இண்டைக்கு நாங்கள் கொஞ்ச Friends சேர்ந்து ஒரு படத்துக்கு போனனாங்கள். அது தான் late.

*ரம்யா: நீர் எல்லாம் என்ன love பண்ணுகிறீர். என்னை விட்டிட்டு படத்திற்கு போகிறீர். அதுசரி என்ன படம்?*

மோகன்: அது ட்விஸ்டர் (TWISTER) என்று சொல்லி ஒரு English படம். Twister என்றால் ஒருவகை Tornado அல்லது சூறாவளி மாதிரி.

*ரம்யா: சூறாவளியோ அது தெரிஞ்ச விசயம் தானே!*

மோகன்: நீர் அங்க கேள்விப்பட்ட சூறாவளி இல்லை இது. அமெரிக்காவில் இடையிடையே தோன்றும். ஒருசில செக்கனில ஒரு நகரத்தையே அழித்துவிடும். ஓர் வீட்டை அடித்துத் தரை மட்டமாக்கி விட்டுச் செல்லும்போது அடுத்த வீட்டை அது இம்மியளவும் தொட்டிருக்காது. ஒரு சின்னக் குழந்தையை எவ்வித பாதிப்பும் இல்லாமல் சில மைல் தூரம் தூக்கிச் செல்லும். ஏன் ஒரு பெரிய யானையைக் கூட தூக்கிக் கொண்டு போகும். ஒரு சிறிய பாதையால் சென்றுகொண்டிருக்கும். அதனுடைய பாதையில் அகப்படுவதை மட்டும் துவம்சம் செய்து விடும்.

*ரம்யா: இது ஏதோ Documentary படம் மாதிரி இருக்கு. story ஏதாவது இருக்கோ?*

மோகன்: அது தான் கெட்டிக்காரத்தனம். சின்ன ஒரு கதையை இதற்குள்ளே புகுத்தி அழகாக சூறாவளியுனுடைய கொடுமையைச் சொல்லுகிறார்கள். ஜோ ஹாடிங் உம் அவருடைய குழுவினரும் பல்கலைக்கழக விஞ்ஞானிகள். இவர்கள் பாரிய அழிவை ஏற்படுத்தும் இச் சூறாவளியின் தன்மை, தோன்றும் விதம், போக்கு என்பவற்றை ஆராய முற்படுகிறார்கள். தாங்கள் தயாரித்த ஒரு கருவி மூலம் பல நூற்றுக்கணக்கான சிறிய sensor களை சூறாவளியினுடைய மையப்பகுதியினுள் அனுப்பி அதனுடைய போக்குகளை ஆராய முற்படுகினம். இங்கு ஜோவை விவாகரத்துச்செய்யத் தயாராகவிருந்த ஜோவின் கணவரும் அவருடைய காதலியும் இவர்களுடன் இணைகிறார்கள். ஜோவின் கணவரும் ஒரு வானிலையாளர். இந்தக் குழுவினிருக்குப் போட்டியாக வசதி படைத்த வானிலையாளரான ஜோனாஸ் உம் இதே சூறாவளியை ஆராய முற்படுகிறார். இவர்களுக்கிடையான போட்டி, யார் இப் போட்டியில் ஜெயிக்கிறார்கள், இடையே சூறாவளி... இதைப்பற்றியது தான் கதை.

*ரம்யா: நல்லம். நடிப்பு எப்படி? யார்...யார் நடிக்கிறார்கள்?*

மோகன்: முக்கியமான வேடத்தில் நடிக்கிறது "Helen Hunt" இவர் ஏற்கனவே NBC TV யில் "Mad about you" தொடர் மூலம் புகழ் பெற்றவர். ஏற்கனவே "Project X" போன்று ஒரு சில படங்களிலேயும் நடித்திருக்கிறார். Bill Paxton கணவராக வருகின்றார். இவர் அண்மையில் Tom Hanks, Kevin Bacon உடன் "Apollo 13" படத்தில் நடித்திருந்தார். "True lies" படத்திலும் சிறிய வேடத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிக்கிறார். Cary Elwes போட்டி விஞ்ஞானியாக நடிக்கிறார். "Robin Hood: Men in Tights" படத்தில் கதாநாயகனாக நடித்தவர். "Jurassic Park" மூலம் புகழ் பெற்ற Michael Crichton தயாரிக்கிறார். Executive Producer ஆக இந்தப் படத்தைத் தயாரிப்பவர் ஜூராசிக் பார்க் படத்தை இயக்கிய Steven Speilberg.

*ரம்யா: வேறு என்ன ஸ்பெஷல் இதில்?*

மோகன்: என்ன இப்படிக் கேட்டிட்டீர்! உம்ம மாதிரி கொஞ்சப் பேர் பறந்து போகிற கட்டம் ஒன்று வருமே சூப்பர்!

*ரம்யா: சூறாவளி பற்றிய படத்தில் தேவதைகள் பறக்கிற கட்டம் ஏன் வருகிறது?*

மோகன்: What....உமக்குப் பெரிய Cindy Crawford என்ற எண்ணம். அது கொஞ்ச மாடுகள் பறந்துபோற கட்டம் டா!

*ரம்யா: நீர் உம்ம மாதிரியே எல்லாரையும் நினைக்கக் கூடாது. வேற என்ன ஸ்பெஷல் சொல்லும்?*

மோகன்: கமரா சூப்பர் என்று சொல்லலாம். வழமையாக முகத்திற்குத்தான் மேக்கப் கொடுத்து மாற்றுவார்கள். இங்கு வானத்திற்கு மேக்கப் கொடுத்து ஆகாயத்தை தமக்கேற்ப மாற்றியிருக்கிறார்கள். Jan de Bond இயக்கியிருக்கிறார். இவர் ஒரு சிறந்த ஒளிப்பதிவாளர்/இயக்குனர்/நடிகர். "Speed" என்று சொல்லி ஒரு அட்டகாசமான படம் வந்துதே அதையும் இவர்தான் இயக்கியிருந்தார்.

*ரம்யா: ஓ! பார்த்தோமே. Ganu reevs, Santra Bullock அதில நடிக்கிறாரகள்.*

மோகன்: யா... சாதாரணமாய் சிறிய, சிறிய பொருட்களை காற்று தூக்கிச்செல்வதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இங்கு மனிதர், மாடுகள், வாகனங்கள், வீடுகள் என்று சூறாவளி இலகுவாகத் தூக்கிச்செல்கிறது. DTS சவுண்ட் உடன் படம் பார்க்கும் போது நாமே ஏதோ சூறாவளிக்குள் அகப்பட்டதைப் போன்ற ஒரு பிரமை.

*ரம்யா: Holy Cow! வீட்டையே தூக்கிச் செல்கிறதா?*

மோகன்: ஓமோம். இன்னுமொன்று.... வயல்வெளிக்குள் போகும் கார் ஒன்றை 100 அடி உயரத்தில் கமரா தொடர்கிறது. பின்னர் திடீரென்று பதிந்து வந்து நீண்ட நேரம் காரைத் தொடர்ந்து வாகனத்துள் சென்று முடிகிறது. ஒரு வித்தியாசமான ஷொட்.

*ரம்யா: is it! என்னை எப்போ கூட்டிக் கொண்டு போகிறீர்?*

மோகன்: விரைவில்... Sharon stone நடித்த "Last Dance" என்ற படமும் நன்றாயிருக்கிறதாம். அதற்குப் போவோமா?

*ரம்யா: No way! நாங்கள் இதற்கே போவோம்.*

மோகன்: சரிடா. இதற்குப் பல விருதுகள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறார்கள்.

*ரம்யா: எனக்கு இதற்குமேல் நிற்க முடியாது. விசா ஓவர். C U டா..........!*

*மோகன்: Bye!........*

*****


**வாரத்தில் 7 நாட்களும் கேட்டு மகிழுங்கள்.**

வாழ்த்துக்கள்,
அறிவித்தல்கள்,
விளம்பரங்களுக்கு...

**867-0066**

88.9 FM கீதவாணி

*எமது அலுவலகம் நேயர்களின் வசதி கருதி, விசாலமான புதிய இடத்தில், ஒலிப்பதிவுக் கூடத்துடன் ஆரம்பமாகியுள்ளது.*

**2387 Eglinton Av.E., Scarborough (at Kennedy)**

*எமது வளர்ச்சிக்கு உதவும் தங்கள் ஆதரவுக்கு நன்றி!*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜா-வின் சொற்சிலம்பம்

போட்டி இல: 7 (முடிவுகள்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 உ | ல | 2 க | க் | 3 கி | ன் | ன | 4 ம் | | பு |
| 5 த | வி | ர | | 6 ர | த் | த | பா | 7 ச | ம் |
| ய | | 8 கா | ம் | க | | | க | ன் | ரு |
| 9 சூ | 10 தா | ட் | ட | ம் | | ம் | த | மு | 11 அ |
| 12 ரி | ம் | ட | 13 ஓ | | கை | | | கா | |
| 14 ய | ப | ம் | | 15 தூ | க் | 16 க | ம் | | ம் |
| ன் | த் | | ம் | ய | ணி | ன் | 17 க | | ன |
| | தி | ந் | ய | ம | 18 த | | க் | லை | மா |
| 19 க | ய | ல் | வி | ழி | | 20 க | ண | வ | ன் |
| போ | ம் | ர | 21 ஓ | | | ல் | 22 வ | 23 க | 24 த |

## பரிசு பெறும் அதிட்டசாலிகள்:

1. வி. நவம் (ரொறன்ரோ)
2. த. விசுவலிங்கம் (ரொறன்ரோ)
3. க. தினேஷ் (ரொறன்ரோ)

★ உங்கள் பதில்கள் யாவும் ஜுன் 30ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

★ ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

★ சரியான பதில் எழுதும் அதிட்டசாலி ஒருவருக்கு $25 பெறுமதியான பரிசுக் கூப்பன்கள் எல் கிரிஷோத் ரைப்செட்டிங் ஸ்தாபனத்தினால் அனுப்பிவைக்கப்படும்.

Creative Photo

where photography is an art.....

Wedding, Digital imaging, Commericial photography and Portraits

(416) 429-8586





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமிருந்து வலம்:

(1) கனடாவின் தமிழ்ப் பத்திரிகைகளில் ஒன்று. (3) இடப்பக்கத்தாலும் படிக்கலாம்; வலப்பக்கத்தாலும் படிக்கலாம் - இரண்டுமே ஒன்றுதான். (4) முருகனின் மலைகளில் ஒன்று. (7) தமிழீழத்தின் மூத்த எழுத்தாளர் ஒருவரின் புனைபெயர். (12) ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று (17) ஒருவகை ஆட்டம். இதனை நிறுத்த வேப்பமிலை பாவிப்பர். (18) காரமான கறிப்பொருள் குழம்பிக்கிடக்கிறது. (20) தமிழ்ச் சஞ்சிகையின் சுருக்கமான பெயர்.

## மேலிருந்து கீழ்:

(1) பூமி (2) பாசக்கயிறு தாங்கியவன் (5) இளையவன் (6) இராசிதான் பத்தாவது (8) கை (9) சொறியச் சொறிய இன்பம், தரும் ஒரு நோய் (11) நகைச்சுவைக் கவி (12) சிறை சென்று தலைவரானார். ஆனால் மனைவிதான் அமையவில்லையாம். (13) பலாத்காரம் தலைகீழாகவுள்ளது. (14) களவே இவன் தொழில்.

## வலமிருந்து இடம்:

(9) வயதுபோனாலும் வனத்துக்கு இவனே ராஜா. (10) தேர் இழுக்க இது தேவை. (15) கீழே பாய் (16) சாப்பிடு (19) உடற்பயிற்சிக்கு நல்லது. வண்டியும் வற்றும்.

**முடிவுத் திகதி:**
**ஜூன் 30, 1996**


விடைகளை தொலைநகலிலும் அனுப்பலாம்

416-425-2625

**ரோஜா** மாத இதழின்

**சொற் சிலம்பம்**

போட்டி இல:
**9**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTERNATIONAL INSURANCE / FINANCIAL SERVICES
&
BST INSURANCE BROKERS
சர்வதேச காப்புறுதி + நிதிச்சேவை



A. VELUPPILLAI (Vel)
(Life Consultant &
Insurance Broker)
காப்புறுதி ஆலோசகர்

கனடாவில்
11வருட
காப்புறுதி
அனுபவம்
சகல காப்புறுதி
விளக்கங்களும்
தமிழில்
வழங்கப்படும்.

ELEVEN CONTINUOUS
YEARS IN CANADIAN
INSURANCE INDUSTRY

Life Section - Under
International Insurance
Property Section- Under
BST Insurance

*ஆயுள்காப்புறுதி
*வீடு
*வாகனம்
*வியாபார
நிலையங்கள்
*சுகாதாரம்
*கல்வி

எம்மால் சகல வித காப்புறுதிகளும்,
உலகில் சிறந்த காப்புறுதி ஸ்தாபனங்களில்
நியாயமான விலையில் உத்தரவாதத்துடன்,
உங்கள் விருப்பத்திற்கமைய, உங்களின்
தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க
வண்ணம் ஒழுங்கு செய்து வழங்கப்படும்.

ஆயுள் காப்புறுதி விசேட
ஆலோசனைகள் உண்டு.

அழையுங்கள்:-
Tel: (416) 499-9596
Fax: (416) 499-9382

2190 Warden Ave., Suite. 203,
Scarborough, ON. M1T 1V6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ROYAL LEPAGE

வீடு
வாங்க, விற்க அல்லது
அதுபற்றிய
ஆலோசனை
பெற்றுக்கொள்ள

இத்துறையில் பல வருடகால
அனுபவத்துடன், தொடர்ந்து
முன்னணி
விற்பனைப்பிரதிநிதிக்கான
விருதுகளைப்
பெற்றுக்கொண்டுவரும்



**கரு. கந்தையா**
அவர்களை நாடுங்கள்

அலுவலகம் : (416) 293 1992
வீடு : (416) 284 9999
வாகனம் : (416) 616 7278

KNOW THE PERSON WHO
KNOWS THE BUSINESS

FOR ALL YOUR REAL ESTATE
NEEDS

**KARU KANDIAH.**

L. Krishoth Typesetting (416) 425 2884

HG

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org